Registered as a News Paper

பக்கங்கள் 06

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANATHAAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 08    திருவள்ளுவர் ஆண்டு 2028    மார்கழி 25    (09-01-1993)    சனிக்கிழமை    ஓசை 326

## விட்டமின், ஏற்புத்தடுப்பூசி யாழ். ஆஸ்பத்திரியில் இல்லை

யாழ்ப்பாணப் போதனாமருத்துவமனையில் விட்டமின் மருந்துவில்லைகள், ஏற்புத்தடுப்பூசி என்பனவற்றிற்குப் பெரும் பற்றாக்குறை நிலவுவதாகக் கூறப்படுகிறது. வெளிநோயாளர் பிரிவில் இந்த மருந்துவகைகள் நோயாளருக்கு வழங்கப்படுவதில்லை. இதேவேளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோருக்கு மட்டும் அவசரதேவைக்குப்பயன்படுத்தப்படுவதாகத் தெரியவருகிறது. மேலும் 1992-ம் ஆண்டில் காலாவதி

(6-ம் பக்கம் பார்க்க)

# சிங்கள அரசியல் கட்சிகள் மீது அங்கிலிக்கன் ஆயர் குற்றச்சாட்டு

## குறுகிய அரசியல் லாபம் கருதி தமிழர் உரிமை புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளை தென்பகுதி அரசியல் கட்சிகள் தமது குறுகிய அரசியல் நோக்கத்திற்காக தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றன. இந்நிலை மாறி சிங்கள அரசியல் கட்சிகளும் சிங்கள மக்களும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வர வேண்டும் என நேற்று முன்தினம் யாழ். வருகைதந்த அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி. வண. ஜோர்ஜ் கென்னத்பெர்னாண்டோ நேற்று எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "சிங்கள மக்கள் இப்பிரச்சினைக்கு தீர்வுகாணும்படி அரசியல் கட்சிகளை வற்புறுத்த வேண்டும்.

"ஆயுதப்படையினரின் முற்றுகையின்கீழ் பொருளாதாரத் தடையை விதித்துக் கொண்டு மக்களை நீண்டகாலத்திற்கு அடக்கி வைத்திருந்தால் அதனால் ஏற்படும் விளைவு மிக மோசமானதாக இருக்கும் என்பதனை அரசாங்கம் உணர வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினையை இராணுவ ரீதியாக தீர்க்க முடியாது. பேச்சுவார்த்தை மூலமே தீர்க்க வேண்டும் இதற்கு எனது சக்திக்கு உட்பட்ட வகையில் சகலவற்றையும் செய்வேன்" என்றார்.

தனது யாழ். வருகை பற்றி குறிப்பிட்ட அவர், 'நான் இங்கு வருவதற்கு ஜனாதிபதியின் சர்வதேசவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனிடம் அனுமதி பெற்றிருந்தேன். ஆனால் கூட்டுப்படைத் தலைமையலுவலகம் எனக்குக் கிளிநொச்சி வரை வரவே அனுமதியளித்தது யாழ்ப்பாணம் வருவதற்கு ஹெலிகொப்டர் வசதிசெய்து தருவதாக அரசாங்கம் என்னிடம் கூறியது. ஆனால் மக்கள் எந்தப்பாதையால் பிரயாணம் செய்கிறார்களோ அந்தப் பாதையாலேயே வர விரும்பினேன்.

அவ்வாறு அப்பாதையால் பிரயாணம் செய்த பின்னர் தான் போக்குவரத்தில் உள்ள சிரமம் எனக்குப் புரிந்தது. எனவே மக்களுக்கு ஒரு நல்ல பாதையை ஒழுங்கு செய்ய வேண்டும். கண்ணிவெடிகள் நிறைந்த ஆனையிறவுப்பாதை ஊடாகப் பிரயாணம் செய்ய வற்புறுத்துவது பிழையான தொன்று ஒழுங்கான பாதை ஒன்று இல்லாமையினால்

(6 ஆம் பக்கம் பார்க்க)



பரி. யோவான் கல்லூரி மண்டபத்தில் நேற்று மாலை அங்கலிக்கன் ஆயர் அதி. வண. கென்னத்பெர்னாண்டோவுக்கு வழங்கிய வரவேற்பு வைபவத்தில் அவர் ஆசீர்வாதம் வழங்கும் காட்சி. அவருக்கு இடது பக்கத்தில் தென்னிந்திய திருச்சபை ஆயர் அதி. வண. டி. ஜே. அம்பலவாணரும் வலது பக்கமாக நல்லை குருமகா சன்னிதானம் சிறிலசிறி சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் காணப்படுகின்றனர்.

## சுயநிர்ணய உரிமை; தனி ஈழம்

## வட - கிழக்கு மாகாண நிதியில் கோடிக் கணக்கில் மோசடி

# அங்கிலிக்கன் ஆயர் குற்றச்சாட்டு

## குறுகிய அரசியல் லாபம் கருதி தமிழர் உரிமை புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளை தென்பகுதி அரசியல் கட்சிகள் தமது குறுகிய அரசியல் நோக்கத்திற்காக தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றன. இந்நிலை மாறி சிங்கள அரசியல் கட்சிகளும் சிங்கள மக்களும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வர வேண்டும் என நேற்று முன்தினம் யாழ். வருகைதந்த அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி. வண. ஜோர்ஜ் கென்னத்பெர்னாண்டோ நேற்று எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "சிங்கள மக்கள் இப்பிரச்சினைக்கு தீர்வுகாணும்படி அரசியல் கட்சிகளை வற்புறுத்த வேண்டும்.

"ஆயுதப்படையினரின் முற்றுகையின்கீழ் பொருளாதாரத் தடையை விதித்துக் கொண்டு மக்களை நீண்டகாலத்திற்கு அடக்கி வைத்திருந்தால் அதனால் ஏற்படும் விளைவு மிக மோசமானதாக இருக்கும் என்பதனை அரசாங்கம் உணர வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினையை இராணுவ ரீதியாக தீர்க்க முடியாது. பேச்சுவார்த்தை மூலமே தீர்க்க வேண்டும் இதற்கு எனது சக்திக்கு உட்பட்ட வகையில் சகலவற்றையும் செய்வேன்'' என்றார்.

தனது யாழ். வருகை பற்றி குறிப்பிட்ட அவர், 'நான் இங்கு வருவதற்கு ஜனாதிபதியின் சர்வதேசவிவகார ஆலோசகர் பிரட்மன்வீரக்கோனிடம் அனுமதி பெற்றிருந்தேன். ஆனால் கூட்டுப்படைத் தலைமையலுவலகம் எனக்குக் கிளிநொச்சி வரை வரவே அனுமதியளித்தது யாழ்ப்பாணம வருவதற்கு ஹெலிகொப்டர் வசதிசெய்து தருவதாக அரசாங்கம் என்னிடம் கூறியது. ஆனால் மக்கள் எந்தப்பாதையால் பிரயாணம் செய்கிறார்களோ அந்தப் பாதையாலேயே வர விரும்பினேன்.

அவ்வாறு அப்பாதையால் பிரயாணம செய்த பின்னர் தான் போக்குவரத்தில் உள்ள சிரமம் எனக்குப் புரிந்தது. எனவே மக்களுக்கு ஒரு நல்ல பாதையை ஒழுங்கு செய்ய வேண்டும். கண்ணிவெடிகள் நிறைந்த ஆனையிறவுப்பாதை ஊடாகப் பிரயாணம் செய்ய வற்புறுத்துவது பிழையான தொன்று ஒழுங்கான பாதை ஒன்று இல்லாமையினால்

(6 ஆம் பக்கம் பார்க்க)



பரி. யோவான் கல்லூரி மண்டபத்தில் நேற்று மாலை அங்கலிக்கன் ஆயர் அதி. வண. கென்னத்பெர்னாண்டோவுக்கு வழங்கிய வரவேற்பு வைபவத்தில் அவர் ஆசீர்வாதம் வழங்கும் காட்சி. அவருக்கு இடது பக்கத்தில் தென்னிந்திய திருச்சபை ஆயர் அதி. வண. டி. ஜே. அம்பலவாணரும் வலது பக்கமாக நல்லை குருமகா சன்னிதானம் சிறிலசிறி சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் காணப்படுகின்றனர்.

## சுயநிர்ணய உரிமை; தனி ஈழம் சிங்களவரே தீர்மானிக்கட்டும்

### குருமுதல்வர் கலாநிதி இம்மானுவேல்

சுயநிர்ணயஉரிமையுடன் கூடிய தீர்வா? அல்லது தனி ஈழமா என்ற நிலைக்குத் தமிழ் மக்கள் தள்ளப்பட்டுவிட்டார்கள். இதில் எதை வழங்குவது என்பதைத் சிங்களவர்கள் தீர்மானிக்க வேண்டும்.

இவ்வாறு நேற்று பரி.யோவான் கல்லூரியில் அங்கிலிக்கன் திருச்சபை ஆயா அதி. வண ஜோர்ஜ் கென்னத்பெர்னாண்டோ அவர்களின் வரவேற்பு கூட்டத்தில் யாழ். கத்தோலிக்கத் திருச்சபை ஆயர் சார்பில் கலந்து கொண்டு உரையாற்றிய குரு முதல்வர் கலாநிதி எஸ்.ஜே. இம்மானுவேல் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் தமிழர்களின் அடிமை வாழ்வு ஒரு முடிவுக்கு வரவேண்டும். சில முடிவுகளை எடுத்துவிட்டோம். அதிலிருந்து திரும்புவதற்கில்லை. எங்களை நிர்ணயிக்கும் சக்தியை நாமே வைத்திருக்க வேண்டும். ஒன்று மட்டும் தெளிவாகியுள்ளது. சிங்கள மக்கள் இப்படி எம்மை இம்சித்தால், நாம் சுயமாக சுதந்திரமாக வாழ வேண்டி வரும் என்றார். அவர் பேசு

( 5ஆம் பக்கம் பார்க்க)

## இளாலி படகுப் படுகொலை ஐ.நா. தலைமைக்கு அறிவிப்பு

[யாழ்ப்பாணம்]

இளாலிக் கடற்பரப்பில் படகுப் பயணிகள் சிறிலங்கா கடற்படையினரால் படுகொலை செய்யப்படுவது குறித்து ஜெனீவாவில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய தலைமை அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இளாலிக் கடற்பரப்பினூடாக படகுகளில் பயணம் செய்யும் அப்பாவிப் பொது மக்கள் மீது அண்மைக் காலமாக சிறிலங்கா கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் நடாத்தி வருகின்றனர். கடற்படையினரின் இவ்வாறான பீரங்கித் தாக்குதல் காரணமாக கடந்த சனிக்கிழமை மட்டும் நாற்பதுக்கும் அதிகமான பயணிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் இதற்கு முன்னரும் பல பயணிகள் இக்கடற்பரப்பில் பயணம் செய்யும்போது கடற்படையினரது தாக்குதல்களால் கொல்லப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா கடற்படையினர் படகுப் பயணிகள் மீது தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் கண்மூடித் தனமான

(06 ஆம் பக்கம் பார்க்க)

## வட - கிழக்கு மாகாண நிதியில் கோடிக் கணக்கில் மோசடி

### அரசியல்வாதி, அதிகாரிகள் தொடர்பு

வடக்கு கிழக்கு மாகாண சபைக்குரிய பணத்தில்கோடிக் கணக்கான ரூபாய்கள் மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் அரசியல் வாதி ஒருவரும் பல உயர் அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் 'யுக்திய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கஅரசாங்கத்தினால் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு அனுப்பப்பட்ட கோடிக்கணக்கான ரூபாய்கள் தவறுதலாக ஊவா மாகாண சபைக்கு சென்றுள்ளது இதனைச் சுருட்டிக் கொள்ள எடுத்த முயற்சியில் செல்வாக்குள்ள அமைச்சர் ஒருவரின் நண்பரும் அரசியல் வாதியும் சமூகத்திணைக்கள உயர் அதிகாரிகளும் உள்ளடங்குவதாக தெரிய வருகிறது.

இதுதொடர்பாக பூர்வாங்க விசாரணையொன்று நடாத்துமாறு எதிர்க்கட்சிகள் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன. ஊவா மாகாண சபைக்கு பணம் சென்றது சதியா, தவறா என கண்டறிவதில் குற்றப்புலனாய்வுத் துறை விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிய வருகிறது.

## புலிகள் பலம் வாய்ந்த சக்தி; அவர்களுடன் பேசியே ஆகவேண்டும்

### அமைச்சர் தொண்டமான்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பகுதியில் நிலையான ஒரு தீர்வைக்காண வேண்டுமானால் விடுதலைப் புலிகளுடன்பேசியே ஆகவேண்டும். ஏனெனில் அவர்கள் அப்பிரதேசத்தில் பலம் வாய்ந்த சக்தியாக விளங்குகின்றார்கள் அதனால் தான் நான் அவர்களுடன் பேச முன்வந்தேன் என அமைச்சர் தொண்டமான் பிரபல சிங்களப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் உள்ள தேசிய பிரச்சினைக்கு என்னால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு குறுகிய இலாபம் கொண்ட அரசியல் வாதிகளாலும், இனவாதிகளாலும் கிளப்பப்பட்ட எதிர்ப்பைத் தொடர்ந்துகைவிட்டேன். இங்கிருந்து ஒரு தீர்வை கொண்டு சென்றே விடுதலைப் புலிகளுடன் கதைக்க வேண்டும. இங்கு ஒரு தீர்வு ஏற்படாத காரணத்தால் தான் நான் யாழ்ப்பாணம் செல்லவில்லை.

எனினும் எனது யோசனைகளை தெரிவுக் குழுவிடம் கையளித்தேன். அதுவும உதாசீனம் செய்யப்பட்டது

நாட்டில் உள்ள பெரிய கட்சிளான ஐ. தே. க. சுதந்தி

(06 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி. (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி. (இ-5679)

### சங்கீதம்

வட இலங்கைச் சங்கீதசபை இரண்டாந்தரப் பரீட்சை பாடத் திட்டத்திற்கமைய சங்கீத ஆசிரியை ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா தயாரித்த ''சங்கீதம் - வினா விடை'' அனைவர்க்கும் பயன்படும். எங்கும் கிடைக்கும். (3913)

### திருமண சேவை

பொருத்தமான மணமகள் மணமகன் தேடுபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், சந்திப்பு ஞாயிறு காலை. (3953)

### புலமைப்பரிசில்வகுப்பு (ஆண்டு 5)

தூர இட மாணவர்களின் வசதி கருதி சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் வாராந்த வகுப்புக்கள் (week end class) 09-01-93 சனி பி.ப 4-00 மணிக்கு ஆரம்பமாகின்றன. அநுமதிக்கு முந்துங்கள். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம். (3963)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். இந்துக்கல்லூரியின் வர்த்தகப் பிரிவு ஆசிரியராக பணியாற்றி நேற்று அமரத்துவமெய்திய அமரர் திரு. தே. யோகராஜா அவர்கட்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகிறோம். இவரது திடீர் பிரிவால் துயருறும் இவரது குடும்பத்தாரினதும், மற்றும் அனைவரினதும் துன்பத்தில் நாமும் பங்கெடுத்துக் கொள்கிறோம்.

94ஆம் ஆண்டு
வர்த்தக பிரிவு மாணவர்கள்
யாழ். இந்துக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

(சி-5740

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. உடலமைப்பியல் பேராசிரியர்
2. நோயியல் பேராசிரியர்
3. மருத்துவப் பேராசிரியர்
4. மனநோயியல் பேராசிரியர்
5. குழந்தைமருத்துவப் பேராசிரியர்
6. அங்கக்கோணல் அறுவை மருத்துவ அறக்கொடைத் தவிசு
7. சமூலையியல் அறக் கொடைத் தவிசு
8. சட்டமருத்துவப் பேராசிரியர்
9. மருந்தியல் பேராசிரியர்
10. அறுவை மருத்துவம்
11. விரிவுரையாளர்/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11-உடற்றொழிலியல்/சமுதாய மருத்துவம்/சட்ட மருத்துவம்/ நுண்ணுயிரியல்/ ஒட்டுண்ணியியல்/நோயியல்/ மருந்தியல்/மருத்துவம்/ மகப்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும்/குழந்தை மருத்துவம்/மனநோய் மருத்துவம்/அறுவை மருத்துவம்/உடலமைப்பியல்
12. தற்காலிக விரிவுரையாளர் உடற்றொழிலியல்/சமுதாய மருத்துவம்/சட்ட மருத்துவம்/ நுண்ணுயிரியல்/ ஒட்டுண்ணியியல்/நோயியல்/ மருந்தியல்/ மருத்துவம்/மகப்பேற்று மருத்துவமும் மாதர்நோயியலும்/குழந்தை மருத்துவம்/மனநோய் மருத்துவம்/அறுவை மருத்துவம்/உடலமைப்பியல்
13. ஆங்கில போதனாசிரியர் தரம் 11
14. தற்காலிக/ செய்முறை காட்டுநர் உயிரிரசாயனவியல்

பேராசிரியர்களுக்கும் அறக்கொடைத் தவிசாளருக்கும் விண்ணப்ப முடிவுதேதி 1993 03.10 ஆகும் ஏனையோருக்கு முடிவுதேதி 1993 02.15

சம்பள அளவுத்திட்டம
பேராசிரியர் தரம் 11:
ரூபா 12.200 - 6x300- 14.000/-
(மாதமொன்றுக்கு)
சிரேஷ்ட விரிவுரையாளர்: தரம் 11
ரூபா 8,000 - 5x250- 9,250/-
[மாதமொன்றுக்கு]
விரிவுரையாளர் மருத்துவம்
ரூபா 4,500 - 10x200- 6 500/-
[மாதமொன்றுக்கு]

(மருத்துவப்பீடத்தில் விரிவுரையாளருக்கு முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் இரண்டுபடி அதிகமாக வைக்கப்படுவர் அதாவது 4,900/-சம்பளத்தில் வைக்கப்படுவர்.

தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்)
ரூபா 4 900/- மாதமொன்றுக்கு (நிலையானது)

தற்காலிக செய்முறை காட்டுநர்
ரூபா 3,250 / மாதமொன்றுக்கு (நிலையானது) (பரீட்சைப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போர் 3,000 / ரூபா மாதாந்தச் சம்பளத்தில் வைக்கப்படுவர்)

ஆங்கில போதனாசிரியர் தரம் 11.
ரூபா 3,500 / மாதமொன்றுக்கு (நிலையானது)

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் பத்திரங்களை ரூபா 20 / நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தாபனக்கிளையிலிருந்துபெற்றுக்கொள்ள வேண்டும். தபால்மூலம் இவ் விண்ணப்பப்படிவங்களைப் பெறவிரும்புவோர் அதற்கான வேண்டுகோளுடன் பதிவாளர்/நிதியாளர் பெயரில் ரூபா 20/ க்கான காசுக் கட்டளை/தபாற்கட்டளையுடன் 23x10 ச.மீ அளவு

ராணுவத்தினரின் பிள்ளைகளுக்கு

## பிரதான கல்லூரிகளில் அனுமதி வழங்க கோரிக்கை

வடக்கு கிழக்கு பகுதிகளில் யுத்தத்தில் ஈடுபடும் இராணுவத்தினரின் பிள்ளைகளுக்கு சிறிலங்காவின் பிரதான பாடசாலைகளில் கல்வி பயல்வதற்கு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும் எனப் படையினர் நலன்புரிச் சங்கத்தின் தலைவரும், பிரதி சபாநாயகருமான காமினி பொன்சேகாபாதுகாப்பு அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்

இது தவிர அரசாங்க துறையில் தொழில் வசதிகளை வழங்கும் போதும், மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் போதும் படையினரின் பிள்ளைகளுக்கு விசேட கவனம் காட்டப்பட வேண்டும். எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கவிதைப் பட்டறை

(கொழும்புத்துறை)

நாயன் மார்கட்டு சனசமூக நிலையம் நடாத்தும் கவிதைப் பட்டறை இன்றும் நாளையும் காலை 9.00 மணிதொடக்கம் பி. பகல் 1 00 மணி வரை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

## நினைவு கூருகின்றோம்

## 1993-01-09

1985-ஆம் ஆண்டு இதே தினத்தில், யாழ்ப்பாணம் புத்தூர், ஆவரங்கால் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போதுஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

கப்டன், பண்டிதர்-இளங்கோ (சின்னத்துரை ரவீந்திரன்-பாரதி வீதி, கம்பர்மலை, வல்வெட்டித்துறை யாழ்ப்பாணம்)

நேரு (செல்லையா தில்லைச்சந்திரன்-கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்)

சுராட்டி ரவி-ராஜீவ் (சோமசுந்தரம்பிரதாபன்-இல. 36,ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, நல்லூர், யாழ்ப்பாணம்]

சாமி [ஆறுமுகம் தவரெத்தினம்-சாமி வீதி, ஆவரங்கால், புத்தூர், யாழ்ப்பாணம்)

தவம் [நடேசு தவராசா-அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால், புத்தூர்-யாழ்ப்பாணம்]

சிவா [சிவகுரு சிவேந்திரன் - அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால், புத்தூர்-யாழ்ப்பாணம்]

இதே முற்றுகையின் போது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழர்கள்

1987-ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய

★ பப்பான் (சின்னையா மகேந்திரன்-சதிரவெளி, வாகரை-மட்டக்களப்பு)

1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் காரைநகர்ப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது தன்னைத்தானே சுட்டு வீரச்சாவெய்திய

லெப்.கேணல்/பாண்டியன்-குட்டி (செல்லத்துரை சிறிகரன் சிறிகரன் வீதி, பிரம்படி, கொக்குவில்-யாழ்ப்பாணம்]

1989 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்பில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு அப்பகுதி முகாமில் வைத்து அடித்துக் கொலை செய்யப்பட்ட

பேபி (ஆறுமுகம் குணசேகரம்-தொல்புரம் மத்தி, சுழிபுரம்-யாழ்ப்பாணம்]

1990 ஆம் ஆண்டு கிளிநொச்சி-பனை,புலோப்பளைப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும்தேசவிரோதக் குழுவினருடான சமரில் வீரச்சாவெய்திய

லெப். பக்தி (பரஞ்சோதி நந்தகுமார் - நாவற்குழி சந்தி, கைதடி, யாழ்ப்பாணம)

லெப். விக்னா (யாழ்ப்பாணம்)

2-ம் லெப். ஜெகன் (கதிர்காமத்தம்பி அகிலன்- எழுதுமட்டுவாழ், கொடிகாமம் - யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மாதகல் பகுதியில் தேசவிரோதக் குழுவினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

மது (எட்வின் கொறின் - கோண்டாவில்-யாழ்ப்பாணம்)

அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப் படையினரால் கைதாகித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு பின் பேருந்து நிலையத்திலிருந்து சடலங்களாக மீட்கப்பட்ட 2- தமிழிளைஞர்கள்.

1992ஆம் ஆண்டு மட்டக்களப்பு - சந்திவெளித்திடல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

## மகாபொல கொடுப்பனவு

## 1ஆம் தவணைப் பணம்

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாம் வருடம்

திருமண சேவை

பொருத்தமான மணமகள் மணமகன் தேடுபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், சந்திப்பு ஞாயிறு காலை. (3953)

## புலமைப்பரிசில்வகுப்பு
(ஆண்டு 5)

தூர இட மாணவர்களின் வசதி கருதி சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் வாராந்த வகுப்புக்கள் (week end class) 09-01-93 சனி பி.ப 4-00 மணிக்கு ஆரம்பமாகின்றன. அனுமதிக்கு முந்துங்கள். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம். (3963)

பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. உடலமைப்பியல் பேராசிரியர்
2. நோயியல் பேராசிரியர்
3. மருத்துவப் பேராசிரியர்
4. மனநோயியல் பேராசிரியர்
5. குழந்தைமருத்துவப் பேராசிரியர்
6. அங்கக்கோணல் அறுவை மருத்துவ அறக்கொடைத் தவிசு
7. சமுலையியல் அறக் கொடைத் தவிசு
8. சட்டமருத்துவப் பேராசிரியர்
9. மருந்தியல் பேராசிரியர்
10. அறுவை மருத்துவம்
11. விரிவுரையாளர்/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11-உடற்றொழி
துவம்/அறுவை மருத்துவம்/உடலமைப்பியல்
12. தற்காலிக விரிவுரையாளர் உடற்றொழிலியல்/சமுதாய மருத்துவம்/சட்ட மருத்துவம்/ நுண்ணுயிரியல்/ ஒட்டுண்ணியியல்/நோயியல்/ மருந்தியல்/ மருத்துவம்/மகப்பேற்று மருத்துவமும் மாதர்நோயியலும்/குழந்தை மருத்துவம்/மனநோய் மருத்துவம்/அறுவை மருத்துவம்/உடலமைப்பியல்
13. ஆங்கில போதனாசிரியர் தரம் 11
14. தற்காலிக/ செய்முறை காட்டுநர் உயிரிரசாயனவியல்

பேராசிரியர்களுக்கும் அறக்கொடைத் தவிசாளருக்கும் விண்ணப்ப முடிவுதேதி 1993 03.10 ஆகும் ஏனையோருக்கு முடிவுதேதி 1993 02.15

[மாதமொன்றுக்கு]
விரிவுரையாளர் மருத்துவம்
ரூபா 4,500 - 10x200- 6 500/-
[மாதமொன்றுக்கு]
(மருத்துவப்பீடத்தில் விரிவுரையாளருக்கு முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் இரண்டொடி அதிகமாக வைக்கப்படுவர் அதாவது 4,900/-சம்பளத்தில் வைக்கப்படுவர்.
தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்)

ரூபா 4 900/- மாதமொன்றுக்கு (நிலையானது)
தற்காலிக செய்முறை காட்டுநர்

ரூபா 3,250 / மாதமொன்றுக்கு (நிலையானது) (பரீட்சைப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போர் 3,000 / ரூபா மாதாந்தச் சம்பளத்தில் வைக்கப்படுவர்)
ஆங்கில போதனாசிரியர் தரம் 11.

ரூபா 3,500 / மாதமொன்றுக்கு (நிலையானது)

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் பத்திரங்களை ரூபா 20 / நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தாபனக்கிளையிலிருந்துபெற்றுக்கொள்ள வேண்டும். தபால்மூலம் இவ் விண்ணப்பப்படிவங்களைப் பெறவிரும்புவோர் அதற்கான வேண்டுகோளுடன் பதிவாளர்/நிதியாளர் பெயரில் ரூபா 20/ க்கான காசுக் கட்டளை/தபாற்கட்டளையுடன் 23x10 ச.மீ அளவுடையதும் சுயமுகவரியிடப்பட்டதும் ரூபா 1/ முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் இப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் தாபனக்கிளையிலிருந்து பெறப்படாத விண்ணப்பப் படிவங்களில் அனுபபப்படும் விண்ணப்பங்களும் கேட்கப்பட்ட விபரங்கள் தெளிவாக குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993 01-02

(சி-5741)

# மகாபொல கொடுப்பனவு
# 1ஆம் தவணைப் பணம்

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளது.

### இரண்டாம் வருடம்

மருத்துவபீடம்
கலைப்பிரிவு
வர்த்தகப் பிரிவு
வியாபார நிர்வாகப் பிரிவு
பௌதிக விஞ்ஞானப் பிரிவு
உயிரியல் விஞ்ஞானப் பிரிவு

— 11-01-93 — 1.30-3 00 பி.ப
15-01-93 — 1.30-3.00 பி.ப
20-01-93 — 1.30-3.00 பி.ப

### மூன்றாம் வருடம்

மருத்துவ பீடம்
கலைப் பிரிவு
வர்த்தகப் பிரிவு
வியாபார நிர்வாகப் பிரிவு
பௌதிக விஞ்ஞானப் பிரிவு
உயிரியல் விஞ்ஞானப் பிரிவு

— 12-01-93 — 1.30-3.00 பி.ப
18-01-93 — 1.30-3.00 பி.ப
21-01-93 — 1.30-3.00 பி.ப

### நான்காம் வருடம்

மருத்துவபீடம் (4ஆம், 5ஆம் வருடங்கள்) — 13-01-93 — 1 30-3.00 பி.ப
கலைப் பிரிவு
வர்த்தகப் பிரிவு — 19 01-93 — 1.30-3.00 பி.ப
வியாபார நிர்வாகப் பிரிவு
உயிரியல் விஞ்ஞானப் பிரிவு — 22-01-93 — 1.30-3.00 பி.ப

### கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/ பெறுமதியான முத்திரை

— பதிவாளர்

(சி-5734)

சாய் (ஆறுமுகம் தவரெத்தினம்-சாமி வீதி, ஆவரங்கால், புத்தூர், யாழ்ப்பாணம்)

தவம் [நடேசு தவராசா-அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால், புத்தூர்-யாழ்ப்பாணம்]

சிவா [சிவகுரு சிவேந்திரன் - அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால், புத்தூர்-யாழ்ப்பாணம்]

இதே முற்றுகையின் போது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழர்கள்
1987-ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய

★ பப்பான் (சின்னையா மகேந்திரன்-கதிரவெளி, வாகரை-மட்டக்களப்பு)

1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் காரைநகர்ப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது தன்னைத்தானே சுட்டு வீரச்சாவெய்திய

லெப்.கேணல்/பாண்டியன்-குட்டி (செல்லத்துரை சிறிகரன் சிறிகரன் வீதி, பிரம்படி, கொக்குவில்-யாழ்ப்பாணம்]

1989 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்பில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு அப்பகுதி முகாமில் வைத்து அடித்துக் கொலை செய்யப்பட்ட

பேபி (ஆறுமுகம் குணசேகரம்-தொல்புரம் மத்தி, சுழிபுரம்-யாழ்ப்பாணம்]

1990 ஆம் ஆண்டு கிளிநொச்சி-பளை, புலோப்பளைப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும்தேசவிரோதக் குழுவினருடான சமரில் வீரச்சாவெய்திய

லெப். பக்தி (பரஞ்சோதி நந்தகுமார் - நாவற்குழி சந்தி, கைதடி, யாழ்ப்பாணம)

லெப். விக்னா (யாழ்ப்பாணம்)

2-ம் லெப். ஜெகன் (கதிர்காமத்தம்பி அகிலன்- எழுதுமட்டுவாழ், கொடிகாமம் - யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மாதகல் பகுதியில் தேசவிரோதக் குழுவினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

மது (எட்வின் ஜொறின் - கோண்டாவில்-யாழ்ப்பாணம்)

அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப் படையினரால் கைதாகித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு பின் பேருந்து நிலையத்திலிருந்து சடலங்களாக மீட்கப்பட்ட 2- தமிழிளைஞர்கள்.

1992ஆம் ஆண்டு மட்டக்களப்பு - சந்திவெளித்திடல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

2-ம் லெப். யோசப்- அங்கயன் (செல்லத்துரை சுபாகரன் - அக்கரைப்பற்று அம்பாறை)

விக்கினேஸ்வரன்- பாந்தாமன் (கணபதிப்பிள்ளை கணேஷ் - 5-ம் குறிச்சி அக்கரைப்பற்று அம்பாறை)

மட்டக்களப்பு - பாலயடிவெட்டை முகாமிலிருந்து மட்டு, அம்பாறை எல்லையோர 35-ம் குடியிருப்பு முகாமிற்கு ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

நளினன் -தில்லைக்கண்ணன் - புல்லுமலை - மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - காக்காச்சி வெட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் உயிர் நீத்த-
நாட்டுப்பற்றாளரான-

ஆனந்தம் (மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்ட மாவீரராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி-5738]

# தமிழாராய்ச்சி மாநாடு படுகொலைகள்; நாளை 19 ஆவது நினைவு நாள்

சிறிலங்கா அரசாங்கமும் அதன் முப்படைகளும் தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதிலும், இனக் கொலையை நிகழ்த்துவதிலும் மூர்க்கத்தனமாக ஈடுபட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்தின் தங்க வேலாயுதபுரம் பகுதியில் நடந்த படுகொலை முதல், மட்டக்களப்பில் கொக்கட்டிச் சோலைப் படுகொலை, திருக்கோணமலையின் துவரங்காடு மற்றும் பெருவெளிப் படுகொலைகள், மன்னாரில் அடம்பன் படுகொலைகள், வவுனியாவில் ஒதியமலை, பட்டிக்குடியிருப்பு படுகொலைகள், மற்றும் குமுதினிப் படகில் நிகழ்ந்த படுகொலைகள், வல்வைப் படுகொலைகள், இறுதியாக கிளாலிப் படுகொலைகள் என்றவாறாக இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றன. இப்படுகொலைகளின் வரிசையில் பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்பாக இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் தனித்துவம் வாய்ந்ததாகும்.

யாழ்ப்பாண நகரின் வீரசிங்கம் மண்டபத்திற்கு எதிரே அமைக்கப்பட்ட மேடையிலிருந்து முற்றவெளி மைதானத்தில் சூழுமிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களை நோக்கி சொற்பொழிவுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. அந்தச் சொற்பொழிவாளர்கள் அரசியல் பற்றிப் பேசவில்லை. அரசுக்கு எதிரான வன்முறை உணர்வைத் தூண்டும் உரைகளை நிகழ்த்தவில்லை. தமிழரின் உரிமைக் கோரிக்கைபற்றி முழக்கம் எழுப்பவில்லை. தமிழ்மொழியின் சிறப்பைப்பற்றி - அதன் பண்டைய பெருமைகள்பற்றி -தமிழ்மொழியின் வளர்ப்பற்றி தான் சென்னையில் இருந்து வந்திருந்தபேராசிரியர் நயினார் முகமது உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார் கூட்டம் ஆவலோடு செவிமடுத்துக் கொண்டிருந்தது.

யாழ். நூல் நிலையத்தின் பின்புறமாக முனியப்பர் கோவில், திறந்தவெளிஅரங்கு, றீகல் படமாளிகை, வீரசிங்கம் மண்டபம், எரிபொருள் நிரப்பு நிலையம், பிரதான தபால் கந்தோர் என்பவற்றைத் தொட்டுச் செல்லும் அந்தப் பிரதான வீதியில் எள்ளுக்கூட விழுவதற்கு இடம் இல்லாத வகையில் சனத்திரள் நிறைந்திருந்தது. சனத்திரளை ஊடறுத்து செல்வதற்கு கோட்டையிலிருந்து வந்த சிங்களப் பொலிசார் முனைந்தனர் பொது மக்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையை பொறுப்பேற்றிருந்த பொலிசார் வேலியே பயிரை மேய்ந்த கதையாக தமிழ்பொதுமக்கள்மீது தாக்குதல் தொடுத்தனர். துப்பாக்கி வேட்டுக்களைத்தீர்த்தனர் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பொழிந்தனர் அப்பாவிகளான ஒன்பது தமிழ்ப் பொதுமக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன நிராயுதபாணிகளான தமிழ் மக்கள் பதறியடித்து நாலாபுறமும் சிதறி ஓடி மறைந்தனர். இது அனைத்துலக தமிழாராய்ச்சி நிறுவனம் யாழ்ப்பாணத்தில் நடத்திய நான்காவது மாநாட்டின் இறுதிநாள் நிகழ்ச்சி தமிழர்களின் மனதில் ஆழப் பதிந்த தடம்.

ஆனால்... அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தினர் முதலாவது மாநாட்டைக் கோலாலம்பூரிலும், இரண்டாவது மாநாட்டை சென்னையிலும், மூன்றாவது மாநாட்டைப் பாரிசிலும் நடத்திய பின்னர் நான்காவது மாநாட்டை இலங்கையில் நடத்த தீர்மானித்தபோதே சிறிலங்கா அரசு சதி செய்ய ஆரம்பித்து விட்டிருந்தது, எந்த விதமான அரசியல் நோக்குமின்றி மொழி ஆராய்ச்சி என்பதையே முதன்மைப்படுத்தி தமிழரின் கலாசார பாரம்பரிய பெருமைகளை மீட்டுப் பார்க்கும் இந்த மாநாடு கொழும்பிலேயே நடத்தப்பட வேண்டுமென்று அரசு முரண்டு பிடித்தது. மாநாட்டிற்கான அரசின் உதவிகள் நிறுத்தப்படும் என்று மிரட்டியது. பாதுகாப்பு வழங்கப்படமாட்டாது என்று எச்சரித்தது. வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கான நுழைவு அனுமதி (விசா) வழங்குவதில் வேண்டுமென்றே பல இழுத்தடிப்புகள் செய்யப்பட்டன. இத்தனைக்கும் மத்தியில் தமிழ் மக்கள் பல இனங்கள் தமிழுக்கு விழாவெடுத்து கோலாகலமாக மாநாட்டை நடத்தினர்.

இந்த மாநாட்டின் இறுதி நாளன்று சிறிலங்காப் பொலிசார் நிகழ்த்திய அட்டகாசக் கொடுமைகள், இந்திய சுதந்திரப் போரின் ஜாலியன் வாலா பாக் படுகொலைகளுக்கு ஒப்பானது. ஜெனரல் டயஸ் தலைமையில் நிகழ்ந்த ஜாலியன் வாலா பாக் படுகொலைகள் எவ்வாறு இந்திய சுதந்திரப் போரை உக்கிரமாக்கியதோ அதற்கு சற்றும் குறையாத வகையில், அன்றைய யாழ். மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சராக இருந்த சந்திரசேகரா தலைமையில் நிகழ்ந்த தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளும் தாக்கத்தை ஏற்படுத்தின.

இன்று எடுத்ததற்கெல்லாம் விசாரணைக் கமிஷன் நியமிக்கும் சிங்கள ஆட்சியாளர்கள் அன்று இந்தப் பட்டவர்த்தனமான படுகொலைகள் பற்றி எந்த கமிஷனையும் நியமிக்கவில்லை. சிறிலங்காவில் ஆட்சி மேலும் அரசாங்கம் மட்டுமன்றி எதிர்க்கட்சிகளும் தமிழ் மக்களை இரண்டாம் தரக் குடிமக்களாகவே கருதுகின்றன என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டிய முதலாவது நிகழ்ச்சியாக தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் வரலாற்றில் இடம்பிடித்துள்ளன.

**இளையவன்**

# மனித முன்னேற்ற நடுநிலையத்தின் நிவாரணப் பொருளுக்கு தடை

[குருநகர்]

யாழ். மலறமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம்குடாநாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் அகதிகளுக்கு நிவாரணம் வழங்க எடுத்துவர இருந்த உலர் உணவுப் பொருள்களை கொண்டுவர கூட்டுப்படைத் தலைமையகம் மறுப்புத் தெரிவித்திருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

யாழ். மறைமாவட்ட நடுநிலைய இயக்குநர் வண மி. இ. பயஸ் அடிகளார் கடந்த ஒரு மாதகாலம் கொழும்பில் தங்கிநின்று அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு தோல்வியுடன்நேற்று முன்தினம் யாழ் வந்துசேர்ந்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் குடாநாட்டில்மட்டுமன்றி கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களுக்குக்கூட லொறிகளில் ஏற்றிய உலர்உணவுப்பொருள்களை எடுத்துவர இராணுவத் தலைமையகம் மறுத்ததால் அவை கொழும்பிலேயே தரித்து நிற்பதாகவும்தெரிவித்தார்.

இதேவேளை நடுநிலையம் இராணுவக் கட்டுப்பாட்டுள் சிக்கி இருக்கும் தமிழ் மக்களுக்கு உலர்-உணவு மற்றும் உடுபுடவைகள்,பாடசாலை உபகரணங்களை அந்தந்தப் பகுதிகளில் தரித்திருக்கும் பங்குத் தந்தைகள் மூலமாக அனுப்பி வைத்திருப்பதாகவும் அடிகளார் தெரிவித்தார்.

நெடுந்தீவு பங்குத்தந்தை வண ஜெ.பி. அன்ரனி அடிகளாருடாக 12 லட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் மற்றும் உடுபுடைவைகளையும் -

மாதகல் -இளவாலை பகுதி

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 01 – 08 – 1964

உதிர்வு: 30 – 11 – 1992

**மொறிஸ் அன்ரன் அருள்நேசராசா**

"சீவியத்திலும் நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

## நிர்வாகிகள் தெரிவு

தொல்புரம் மத்திய கிராம அபிவிருத்திச் சங்க புனரமைப்பும் புதிய நிர்வாகிகள் தெரிவும் கடந்த 05-01-93 ல்தொல்புரம் மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் வலிமேற்கு உதவி கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. எஸ். தேவநாயகம் தலைமையில் இடம்பெற்று தலைவராகதிரு. அ சுகதேவனும் செயலாளராக திரு. க. லோகேஸ்வரனும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். 8 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவானது விடுதலைப் புலிகளின் தொல்புரம் கிராமியப் பொறுப்பாளர் திரு. கீதன் சிறப்புரை வழங்கினார்.

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

நேதாஜி சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிறுக் கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் நல்லாலைப் பிள்ளையார் கோவில் முன்பாக நடைபெறவுள்ளது.

## சான்றிதழ் வழங்கல்

பிட்மன் சுருக்கெழுத்து வார விழாவும், ஐந்தாவது சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை பிற்பகல் இரண்டு

## 41-ம் நாள் நினைவஞ்சலி



**கடற்புலி கப்டன் நிமலன்**

(அந்தோனிப்பிள்ளை அருள்மரியராசா(

(யோகா)

பிறப்பு : 27 - 04 - 1971 வீரச்சாவு : 2-12-1992

திதி : 11 - 01 - 93

கடலில் காவியம் எழுதிட எழுந்த
அடலேறு கப்டன் நிமலன்
படைவென்று வருவான் எனவிருந்தோம்
இடை நடுவில் சென்றே எமைஏங்க
வைத்தான். உன்பணியை தொடர்வோம்.

மயிலிட்டி இடம்பெயர்ந்த கடற்றொழிலாளர்
ஒருங்கிணைப்புச் சங்கம்
(3958) பருத்தித்துறை

## அறிவித்தல்

காலஞ்சென்ற திருமதி ரதிலஷ்மி குமாரசுவாமியின் பூதவுடல் இன்று09. 1. 1993சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கோப்பாய் ஆசிரியபயிற்சிக்கலாசாலையில்

பிரக்கணக்கான மக்களை நிரப்பு நிலையம், பிரதான ஒடி மறைந்தனர். இது அனை கொழும்பிலேயே நடத்தப்பட வாலா பாக் படுகொலைகளு

# மனித முன்னேற்ற நடுநிலையத்தின நிவாரணப் பொருளுக்கு தடை

[குருநகர்]

யாழ். மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம்குடா நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் அகதிகளுக்கு நிவாரணம் வழங்க எடுத்துவர இருந்த உலர் உணவுப் பொருள்களை கொண்டுவர கூட்டுப்படைத் தலைமையகம் மறுப்புத் தெரிவித்திருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

யாழ். மறைமாவட்ட நடுநிலைய இயக்குநர் வண ம. இ. பயஸ் அடிகளார் கடந்த ஒரு மாதகாலம் கொழும்பில் தங்கிநின்று அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு தோல்வியுடன்நேற்று முன்தினம் யாழ் வந்துசேர்ந்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் குடா நாட்டில்மட்டுமன்றி கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களுக்குக்கூட லொறிகளில் ஏற்றிய உலர்உணவுப்பொருள்களை எடுத்துவர இராணுவத் தலைமையகம் மறுத்ததால் அவை கொழும்பிலேயே தரித்து நிற்பதாகவும்தெரிவித்தார்.

அதேவேளை நடுநிலையம் இராணுவக் கட்டுப்பாட்டுள் சிக்கி இருக்கும் தமிழ் மக்களுக்கு உலர்-உணவு மற்றும் உடுபுடவைகள்,பாடசாலை உபகரணங்களை அந்தந்தப் பகுதிகளில் தரித்திருக்கும் பங்குத் தந்தைகள் மூலமாக அனுப்பி வைத்திருப்பதாகவும் அடிகளார் தெரிவித்தார்.

நெடுந்தீவு பங்குத்தந்தை வண ஜே.பி. அன்ரனி அடிகளாருடாக 12 லட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் மற்றும் உடுபுடைவைகளையும் -

மாதகல் -இளவாலை பகுதியில்சிக்கியுள்ளமக்களுக்கு இளவாலை புனித ஹென்றிஅரசர் கல்லூரிஉபஅதிபர் அருட திரு. யேசுதாஸ் அடிகளூடாக ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களையும் அனுப்பி வைத்திருப்பதாக வண. ம இ. பயஸ் அடிகளார் ஈழநாதம் செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

மே[illegible]வர் கூறுகையில், அப்பகுதிகளுக்கு கப்பல் மற்றும், விமானங்கள் மூலமாக பொருள்களை எடுத்துப்போக வசதி கிடைத்ததால் நடுநிலையம் அதனைச் செய்ய முடிந்ததென்றும்,

குடா நாட்டுள் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து அல்லலுறும் மக்களுக்கு உதவ முடியாமல் இருப்பது வேதனை தருவதாகவும் தெரிவித்தார்.

அடிகளார் கிளாலிக் கொடுரம் நடைபெற்று சடலங்களும், காயமடைந்தவர்களும் கிளிநொச்சிக்கு எடுத்து வரப்பட்டபோது அங்கே நின்றசமயம் நடுநிலைய உதவியாகப் பாதிக்கபட்டவர்களுக்கு உடுபுடைவைகள் மற்றும் நிதி வழங்கியதாகவும் கூறினார்.

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 01 — 08 — 1964

உதிர்வு: 30 — 11 — 1992

### மொறிஸ் அன்ரன் அருள்நேசராசா

"சீவியத்திலும் நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
இருந்த அண்ணலே பலாலி மண்ணில் பிறந்து
பருத்தி கடலில் சிறிலங்கா அரக்கர்கள்
உன்னை குறிவைத்து சுட்டனரோ

ஐயா, உமது குடும்பத்தைத் தவிக்க விட்டு
நீர் எங்குதான் சென்றீரோ
கல்லும் கரைய உன் குழந்தைச் செல்வங்கள்
கதறியழுவது உன் செவியினில் கேட்கிறதோ

உனது தாய் சகோதரர்கள் உனது பிரிவால்
தாங்காது துயரடைகின்றனர். உமது நடிப்புக்கள்
எம் நெஞ்சில் இன்றும் திரைப்படமாக
உள்ளனவே

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று பருத்தித்துறை தேவ மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இறுதிச் சடங்கின் போது நேரில் ஆறுதல் கூறியும் கலந்து கொண்டும் பல உதவிகளைப் புரிந்தவர்களுக்கும் குடும்ப சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், தாய்,
சகோதரர்கள், உற்றார்,
உறவினர்கள்
2ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை

பலாலி வடக்கு,
வசாவிளான்.
(3961)

## நிர்வாகிகள் தெரிவு

தொல்புரம் மத்திய கிராம அபிவிருத்திச் சங்க புனரமைப்பும் புதிய நிர்வாகிகள் தெரிவும் கடந்த 05-01-93 ல்தொல்புரம் மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் வலிமேற்கு உதவி கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. எஸ். தேவநாயகம் தலைமையில் இடம்பெற்று தலைவராகதிரு. அ சுகதேவனும் செயலாளராக திரு. க. லோகேஸ்வரனும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். 8 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவானது விடுதலைப் புலிகளின் தொல்புரம் கிராமியப் பொறுப்பாளர் திரு. கீதன் சிறப்புரை வழங்கினார்.

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

நேதாஜி சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் அல்லாலைப் பிள்ளையார் கோவில் முன்பாக நடைபெறவுள்ளது.

## சான்றிதழ் வழங்கல்

பிட்மன் சுருக்கெழுத்து வார விழாவும், ஐந்தாவது சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை பிற்பகல் இரண்டு மணியளவில் கழகத்தலைவர் சி. குலசிங்கம் தலைமையில் கீவாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க நுண்கலை மன்றம் நடாத்தும் மாதாந்தக் கருத்தரங்குத் தொடர்—1 நாளை 10-ம் திகதி காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கு கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்படுகின்றது.

## பாலர் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சர்வோதய ஆதரவில் இயங்கும் பாலர் பாடசாலைகள் இன்று 9ஆம் திகதி காலை 9 00 மணிக்கு நல்லை ஆதீனத்தில் கலைவிழா ஒன்றை நடத்த உள்ளது

## 41-ம் நாள் நினைவஞ்சலி



### கடற்புலி கப்டன் நிமலன்

(அந்தோனிப்பிள்ளை அருள்மரியராசா(

(யோகா)

பிறப்பு : 27 - 04 - 1971 வீரச்சாவு : 2-12-1992

திதி : 11 -01 - 93

கடலில் காவியம் எழுதிட எழுந்த
அடலேறு கப்டன் நிமலன்
படைவென்று வருவான் எனவிருந்தோம்
இடை நடுவில் சென்றே எமையேங்க
வைத்தான். உன்பணியை தொடர்வோம்.

மயிலிட்டி இடம்பெயர்ந்த கடற்றொழிலாளர்
ஒருங்கிணைப்புச் சங்கம்
பருத்தித்துறை

(3958)

## அறிவித்தல்

காலஞ்சென்ற திருமதி ரதிலஷ்மி குமாரசுவாமியின் பூதவுடல் இன்று09. 1. 1993சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கோப்பாய் ஆசிரியபயிற்சிக்கலாசாலையில் அஞ்சலிக்காக வைக்கப்படும். அனைத்து பழைய பயிற்சி ஆசிரியர்களையும் அழைக்கிறோம்.

அதிபர்
விரிவுரையாளர்கள்
பயிற்சி ஆசிரியர்கள்

ஆசிரியபயிற்சிக்கலாசாலை
கோப்பாய்.

(3964)

## கண்ணீர் அஞ்சலி

திடீரென எமைப் பிரிந்த எமது
கல்வி நிறுவன ஆசிரியர்

### திரு. தே. யோகராஜா

அவர்கட்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம். இவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்
பாரதிதாசன் (BECON) கல்வி நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

[சி-5472]

# அதிகார துஷ்பிரயோகத்தில் இராஜதந்திரிகள் ஈடுபாடு

(கொழும்பு)

இராஜதந்திர அந்தஸ்து உடைய அதிகாரிகள் தமது செல்வாக்கைத் துஷ்பிரயோகம் செய்து வெளிநாடுகளில் தமது நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு விசா பெறுவது பெருமளவில் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஏமாற்று வேலைகளில் ஈடுபடும் சிலருக்கு இவ்வாறான அதிகாரிகள் விசா பெற்றுக் கொடுத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதையடுத்து சில வெளிநாடுகள் சிறிலங்காவின் வெளிநாட்டமைச்சின் கவனத்திற்கு இவ் விடயத்தைக் கொண்டுவந்துள்ளது. இதனைத்தொடர்ந்து நண்பர்கள் மற்றும் உறவினர்களின் விசா விவகாரங்களில் முக்கிய அதிகாரிகள் தலையிடவேண்டாமெனக் கூறும் சுற்றுநிருபங்கள் ஜனாதிபதி செயலகத்தால் அனுப்பப்பட்டுள்ளன.

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

வேலைப்பகுதி தொழிலாளர் / பொதுத்தொழிலாளர் [அமைய]

## பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாண மாநகரசபை அமைய அடிப்படையில் தொழிலாளர் பதவி வெற்றிடங்களை நிரப்பத் தீர்மானித்துள்ளது.

தகைமைகள்.

01. கல்வி: 5ஆம் வகுப்பில் சித்தி.
02. வயது: 18 வயது தொடக்கம் 40 வயதுவரை.
03. யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் தாமே தயாரித்த விண்ணப்பத்துடனும் தமது தகைமைகளை நிரூபிக்கும் மூலச்சான்றிதழ்களுடனும், தேசிய அடையாள அட்டையுடனும் 16-01-1993 ஆம் திகதியன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் பண்டாரமாளிகை வளவில் அமைந்துள்ள மாநகரசபை ஆணையாளர் அலுவலகத்திற்குச் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாநகரசபை அலுவலகம், யாழ்ப்பாணம், 06-01-1993 — மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

(சி-5736)


# ஜனவரிக்கு முன்னர் ஓய்வூதியம் வழங்கப் பணிப்பு

(கொழும்பு)

தமது கடமைகளிலிருந்து ஓய்வுபெற்ற சகலருக்கும் ஜனவரி மாதம் முடிவதற்குமுன்பாக ஓய்வூதியத்தை அளிக்க வேண்டுமெனவும், சுயவிருப்பின்பேரில் வேலையிலிருந்து விலகியோருக்கான நஷ்டஈடு கொடுப்பனவு வழங்கப்படவேண்டும் எனவும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா அமைச்சர்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

1992-ம் ஆண்டில் அரசாங்க மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்தவர்களில் அக்டோபர் மாதத்திற்குமுன்பாகச் சேவையிலிருந்து விலகிய சுமார் 1450 பேருக்குக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருப்பதாகவும், இதற்காக சுமார் இரண்டுகோடியே இருபது லட்சம் ரூபா செலவிடப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 18 | 09 | 1922

மறைவு: 10 | 12 | 1992

### திரு. வல்லிபுரம் நல்லதம்பி

(சரவணை மேற்கு)

அன்பின் உறைவிடமாய், பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் சிகரமாய். இல்லத்தின் ஒளிவிளக்காய் விளங்கிய அன்புத் தெய்வமே. நீங்கள் மறைந்து சென்றாலும் உங்கள் நீங்காத நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு.

- குடும்பத்தினர்

(3958)

## தாதிப்பயிற்சி நெறி

## DIPLOMA IN NURSING

### 28-01-1993 -ல் ஆரம்பமாகின்றன


1. தாதியர் பயிற்சிப் பாடத்திட்டங்கள் (20 பாடங்களை உள்ளடக்கியது.)
2. பிரபல வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சி.
3. பதிவுபெற்ற தாதிய போதனாசிரியர்கள், உத்தியோகஸ்தர்களின் விரிவுரைகள்
4. உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கேற்ற அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
5. ஒருவருட காலப்பயிற்சி.

குறிப்பு:- மாவீரர், போராளிகள் குடும்பத்தவர்களுக்கு இலவச பயிற்சி.

அதிபர்
சாயி மருத்துவக் கல்லூரி,
(பதிவு பெற்றது)
இல: 10, பருத்தித்துறை வீதி,
யாழ்நகர்.

(சி-5727)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திதியும்



மலர்வு: 10.06.1968

உதிர்வு: 5.1.1992

செல்வன்

### கணபதிப்பிள்ளை ரமணன்

(ஆயிலி காரைநகர்)

திதி 09-01-1993


அன்பின் சிகரமாய் அறிவின் உறைவிடமாய் எங்களை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் கொண்டு ஓராண்டு கடந்து விட்டாலும், தங்கள் மேல் கொண்டுள்ள அன்பும், ஆசையும், பாசமும் எங்கள் மனத்தில் என்றும் நிலைத்து நிற்கும். உங்கள் உருவமும், உங்கள் செயல்களும் எங்கள் கண்முன்னே நிழலாடிக் கொண்டே நிற்கின்றன. தங்களின் ஆத்மா சாந்தி அடைய எங்கள் உயிர் உள்ளவரைக்கும் ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்: த. கணபதிப்பிள்ளை
1D. பழைய சோனகத்தெரு
கொழும்பு 12.
[சி-5710]

— குடும்பத்தினர்
164 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 14 — 02 — 1923

உதிர்வு 08 —

## BECON

பாரதிதாசன் கல்வி நிறுவனம்

## இருபத்துமூன்றாம் பிறந்ததினத்தில் நீங்காத நினைவலைகள்



வீர ஜனனம் 02

வீரச் சாவு 05



1922 — 1992

## திரு. வல்லிபுரம் நல்லதம்பி
(சரவணை மேற்கு)

அன்பின் உறைவிடமாய், பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் சிகரமாய், இல்லத்தின் ஒளிவிளக்காய் விளங்கிய அன்புத் தெய்வமே. நீங்கள் மறைந்து சென்றாலும் உங்கள் நீங்காத நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,

இருபாலை வீதி, — குடும்பத்தினர்
கோண்டாவில் கிழக்கு. (3958)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 14 – 02 – 1923
உதிர்வு 08 – 12 – 1992

### அமரர் கந்தையா கனகசபை
(லிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

எங்கள் அருமை அப்பாவே!
திருக்கார்த்திகை தினமதிலே எங்களை
ஏங்கவிட்டு எங்கு சென்றீர்கள்
புன்னகை குடியிருக்க, புகழ்வண்ணம்
சேர்ந்திருக்க, அன்புள்ளம் நிறைந்திருக்க,
கண்ணியம் நிறைந்த உங்கள்
முகம் காணாது ஏங்கித் தவிக்கின்றோம் - அப்பா
ஆறாது ஆறாது அழுதாலும் தீராது
நீறாகிப் போனநிலை நினைவிலும் மாறாது
மாறாத அன்பு கொண்டு மகிழ்வுடன்
வளர்த்தீர்களே தேறாது நிற்கின்றோம்
தேம்பியே நாம் இங்கு நிற்கின்றோம்

உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

"கோகுலா வாசா", — மக்கள், மருமக்கள்,
லிங்கம் ஸ்ரோர்ஸ், — பேரப்பிள்ளைகள்.
இணுவில். [3941]

---

தாதிப்பயிற்சி நெறி

## DIPLOMA IN NURSING

### 28-01-1993 -ல் ஆரம்பமாகின்றன

1. தாதியர் பயிற்சிப் பாடத்திட்டங்கள் (20 பாடங்களை உள்ளடக்கியது.)
2. பிரபல வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சி.
3. பதிவுபெற்ற தாதிய போதனாசிரியர்கள், உத்தியோகஸ்தர்களின் விரிவுரைகள்
4. உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கேற்ற அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
5. ஒருவருட காலப்பயிற்சி.

குறிப்பு:- மாவீரர், போராளிகள் குடும்பத்தவர்களுக்கு இலவச பயிற்சி.

அதிபர்
சாயி மருத்துவக் கல்லூரி,
(பதிவு பெற்றது)
இல: 10, பருத்தித்துறை வீதி,
யாழ்நகர்.
(சி-5727)

---

## BECON
### பாரதிதாசன் கல்வி நிறுவனம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்!

## A/L 93 DAY CLASS

### மீட்டல் வினாவிடை வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| கணக்கியல் | — | சௌந்தி |
| வர்த்தகம் | — | பசில் |
| அளவையியல் | — | S. S. மனோகரன் |
| தமிழ் | — | திருமதி மீரா |
| இந்துநாகரிகம் | — | திருமதி சைலஜா |
| புவியியல் | — | யோசப் |

**ஆரம்பம்: 12-1-93 செவ். 8 A.M.**

- செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு, ஆகிய நாட்களில் வகுப்புக்கள் நடைபெறும்.
- ஒவ்வொரு பாடமும் இருவகுப்புக்களை (பாடத்திட்டம், வினாவிடை) உள்ளடக்கியிருக்கும்

[சி-5729]

---



உதிர்வு: 5.1.1992

செல்வன்
## கணபதிப்பிள்ளை ரமணன்
(ஆயிலி காரைநகர்)
திதி 09-01-1993

அன்பின் சிகரமாய் அறிவின் உறைவிடமாய் எங்களை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் கொண்டு ஓராண்டு கடந்து விட்டாலும், தங்கள் மேல் கொண்டுள்ள அன்பும், ஆசையும், பாசமும் எங்கள் மனத்தில் என்றும் நிலைத்து நிற்கும். உங்கள் உருவமும், உங்கள் செயல்களும் எங்கள் கண்முன்னே நிழலாடிக் கொண்டே நிற்கின்றன. தங்களின் ஆத்மா சாந்தி அடைய எங்கள் உயிர் உள்ளவரைக்கும் ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்: த. கணபதிப்பிள்ளை
1D. பழைய சோனகத்தெரு — குடும்பத்தினர்
கொழும்பு 12. 164 நாவலர் வீதி,
[சி-5710] யாழ்ப்பாணம்.

---

இருபத்துமூன்றாம் பிறந்ததினத்தில்
## நீங்காத நினைவலைகள்



வீர ஜனனம் 09 – 01 – 1970
வீரச் சாவு 05 – 08 – 1990

### கப்டன் ஜொனி
(செல்வன் தெட்சணாமூர்த்தி சத்தியதாஸ்)

எங்கே நீர் சென்றீர்.........
இன்று நீர் மலர்ந்து இருபத்துமூன்றாண்டாம்
உமது சேவைகளைத் தேடுகிறது தமிழீழமண்
உமது அன்பான மலர்ந்த கண்களைத் தேடுகிறது
எம்மிதயம்
உமது பாதைக்கு மரணமேயில்லை
யாழ். கோட்டையில் உதிர்ந்த எம் மைந்தனே
மங்காது உம்நாமம் எந்நாளும் எம்நெஞ்சில்

பலாலி வீதி, — குடும்பத்தினர்
திருநெல்வேலி வடக்கு.
யாழ்ப்பாணம்.
09-01-1993 [3959]

### சிந்தனைக்கு

அரசும், அமைச்சரவையும், இராணுவ முகாமும் செய்யும் ஒவ்வொரு தவறுக்கும் தண்டனை அனுபவிப்பது, ஏழையின் குடிசைதான்.

— சார்லஸ் கோல்ட்டன்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாண 09-01-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2028

க. பெ. எண் - 05

## பாராட்டிற்குரிய ஆயரின் முடிவு

யாழ். கடல் நீரேரி ஊடாக யாழ், குடா நாட்டிற்குள் செல்வதற்கு சிறிலங்கா இராணுவம் தடைவிதித்திருந்த போதும் கூட இலங்கைக்கான அங்கிலிக்கன் திருச்சபையின் புதிய ஆயர் அதி வண. கென்னத் பெர்னாண்டோ நேற்று முன்தினமிரவு யாழ் வந்து சேர்ந்துள்ளார். இராணுவத்தின் கடுமையான எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது ஆயர் அதிவண. கென்னத் பெர்னாண்டோ துணிவுடன் யாழ். கடல் நீரேரி ஊடாக பயணம் செய்துள்ளமை பாராட்டப்பட வேண்டியது ஒன்று.

ஆயர் கென்னத்பெர்னாண்டோ யாழ். விஜயத்தில் சில முக்கிய நோக்கங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் அங்கிலிக்கன் திருச்சபையின் நடவடிக்கைகளை கவனிப்பதும், தமிழ் மக்களின் துயர்களை நேரடியாகக் கண்டறிவதும், விடுதலைப் புலிகள் பிரமுகர்களைச் சந்திப்பதும் முக்கியமானவை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் ஆயரின் நோக்கில் எது அதி முக்கியமானதாக இருந்தாலும் அவர் குடாநாட்டிற்குள் வருகை தந்ததின் மூலம் தமிழ் மக்களின் மீதான அடக்குமுறையினையையும் அவர்கள்மீது சுமத்தப்பட்டுள்ள சுமைகளையும், அவர்களது நெருக்கடியான வாழ்க்கை முறையினையும் நேரடியாகக் காணக் கூடிய வாய்ப்பினைப் பெற்றுள்ளார்.

அதிலும் ஆயர் குடாநாடு வந்துள்ள வேளையானது சிறிலங்கா இராணுவம் தனது முற்றுகையைத் தீவிரமாக்கியுள்ளதோடு படுகொலைகளை தீவிரமாக்கியுள்ள காலமுமாகும் சிறிலங்கா விமானப் படையினரும் கடற்படையினரும் கிறிஸ்மஸ்தினத்தன்று அரியாலையிலும், பின்னர் கிளாலிக் கடற்பரப்பிலும் சித்தன்கேணியிலும் நடத்தியபடுகொலைகளின் சூடு தணியும் முன்னர் அவரது வருகை அமைந்துள்ளது. இது இராணுவத்தின் 'முற்றுகைக்குள்' உலகமறியாது தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் படுகொலைகளை ஆயர் விளங்கிக்கொள்ளப் போதுமானவையாகும்.

இதேவேளை, ஆயர் மேற்கொண்ட குடாநாட்டிற்கான கடற்பயணம், குடாநாட்டு மக்களின். ஆபத்து நிறைந்த பயணங்களை நேரடியாக அனுபவிப்பதற்கும் அத்தியாவசியப் பொருட்களின் உய

# இன்றுயுத்தம் நிறுத்தப்படாவிட்டால் என்றுமே நிறுத்தமுடியாது போய்விடும்

ஒவ்வொரு அரசியல் தலைவர்களும் பிரச்சினைக்கு ஒவ்வொரு தீர்மானங்களை முன்வைக்கிறார்களே தவிர உருப்படியாக அதை நடைமுறைப் படுத்துவதில்லை. மாகாண சபைக்கு அதிகாரங்கள் அளிக்கப்படுவதாக கூறினார்கள். ஆனால் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு மட்டுமல்ல ஏனைய மாகாண சபைகளுக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை. அதிகாரம் அற்ற மாகாண சபை தோல்வியே அடையும்.

தீர்வுக்கான சில ஆலோசனைகள் பலராலும் முன்வைக்கப்பட்டன. ஆனால் ஒன்று கூட நடைமுறைப்படுத்தப்படவில்லை. இப்படியான நிலைமையினால்தான் வடக்கு கிழக்கு பிரச்சினை நீண்டுகொண்டே போகிறது. இன்று நடைபெறும் யுத்தநிலையை நோக்குமிடத்து யுத்தத்தை உடனடியாக நிறுத்தல் முக்கியமானதாகும். ஒரு தேசிய பிரச்சினைக்காகவே பத்து ஆண்டுகளாக யுத்தம் நடைபெறுகிறது.

நாட்டின் பொருளாதாரம் அரசியல், இனங்களுக்கிடையிலான தொடர்புகள், வெளிநாட்டு வியாபாரம், நாட்டின் சமாதானம் போன்றவற்றிற்கு இந்த யுத்தம் ஓர் அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளது. இதனால் இந்த தேசிய பிரச்சினைக்கு ஒரு தீர்வு மிக அவசியம்.

1992 ஆம் ஆண்டு மட்டும் யுத்தத்திற்கு 2100 கோடி ரூபா செலவு செய்துள்ளோம். நாளாந்தம் 5 கோடி ரூபா யுத்தத்திற்காகச் செலவு செய்யப்படுகிறது.

> இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரும். கலைவான தேர்தல் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான டியூ. குணசேகரா லங்காதீப பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியின் மொழியாக்கம் இது.

இந்த ஆண்டு இதைவிட அதிகமாக செலவு செய்யப்படும் என அரசாங்கம் கூறுகின்றது. நமது பொருளாதாரம் இதனை தாங்கக் கூடிய நிலையில் இல்லை.

கடந்த பத்தாண்டு கால யுத்தத்தில் சுமார் 6000க்கும் மேற்பட்ட படையினர் பலியாகியுள்ளனர். 8000 பேர் அங்கவீனராகி உள்ளனர். வடக்கு கிழக்கில் 3000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். 8லட்சம் பேர் அகதிகளாக்கப்பட்டும், 6லட்சம் பேர் அகதி முகாம்களிலும், 2லட்சம் பேர் உறவினருடனும் சீவிக்கின்றார்கள். வடக்கு கிழக்கில் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது.

யுத்தம் ஆரம்பிக்கும் போது 5வயதாக இருந்த பிள்ளை தற்போது 15 வயதில் இருக்கும். எனவே பிள்ளையின் அடிமனதில் யுத்தம் அப்படியே பதிந்து அதன் சிந்தனை எல்லாம் யுத்தத்தைப் பற்றியே இருக்கும் ஒருமைப்பாட்டை ஒருபோதும் விரும்பாது. அவன் இனவாதியாகவோ, இந்திய எதிர்ப்புவாதியாகவோ மாற்றப்படுவான்.

ஏனெனில் யுத்த வடுக்கள் அந்தப் பிள்ளையின் மனதில் பதிந்துவிடும். நீண்ட யுத்தத்தின் பின் நாம் தீர்வை முன்வைத்தாலும் அவன் அதை விரும்பமாட்டான், எனவே இந்த அடிப்படையை மனதில் கொண்டு மிகவிரைவில் யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வர அரசு முயலவேண்டும். யுத்தம் தொடர்ந்தும் நீண்டு கொண்டு போனால் ஒருமைப்பாட்டை கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாதநிலை ஏற்படும்.

நாம் ஒருமைப்பாட்டுடன் வாழவே விரும்புகிறோம். சில அரசியல் வாதிகள் பதவியைக் கைப்பற்றுவதற்காக நாட்டில் இனவாதத்தை கிளப்பி வருகிறார்கள். இவர்களின் போக்கு பிரிவினைக்கு வழிவகுக்கும் என்பதை நாம் மறக்கக்கூடாது.

தமிழர்கள் சரித்திரத்தில் உள்ளது போல் நாட்டைப் பிரித்து தரும்படி கேட்கிறார்கள். சிங்களவர்கள் இது எங்கள் நாடு வடக்கு கிழக்கு எங்களுக்கு வேண்டும் என்கிறார்கள். இது இரண்டிற்கும் இடையேயான ஒரு தீர்வே நிரந்தரமானது. எனவே உரிமைகளையும் கூடிய அதிகாரங்களையும்வழங்குவதன் மூலம் தீர்வு காணமுடியும்.

தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை முன்வைக்குமாறும், அதிகாரத்தை வழங்கும்படியும் கூறுவதால் ஒரு பயனும் இல்லை. முதலில் தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தா விட்டால் 'ஈழம்' அமைவது உறுதி.

கிழக்கு வடக்குடன் இணையவேண்டுமா? எனத் தேர்தல் வைத்தால் நிச்சயமாக கிழக்கு மாகாண மக்கள் இணைய வேண்டும் என்றே வாக்களிப்பார்கள் எனவே அரசு யுத்தத்தை உடனடியாக ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்.

# தமிழ்மக்களின் துயரங்களை என்னால் புரிய முடிகின்றது

## வரவேற்புக் கூட்டத்தில் ஆயர்கென்னத் பெர்னாண்டோ

நீங்கள் பயணம் செய்யும் வழியில்தான் நானும் பயணம் செய்தேன். அதனால் உங்கள் துன்ப துயரங்களையும், மன உணர்வுகளையும் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. உங்கள் துன்பகரமான அனுபவங்களைத் தெற்கில்தெரியப் படுத்தவிரும்புகிறேன். ஆனால் அனுபவங்களை வார்த்தைகளால் விளக்க முடியாது. தென் பகுதி மக்கள் சமாதானத்தை இப்போது விரும்புகிறார்கள். அண்மையில் ஜாஎலவின் சர்வ மதத் தலைவர்கள் கூட்டத்தின் கருப்பொருளும் சமாதானந்தான் என்று அங்கிலிக்கன் திருச்சபையின் புதிய ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஆயரின் யாழ்ப்பாண விஜயத்தைக் கௌரவிக்கும் வகையில் பரி. யோவான் கல்லூரி பீற்றோ ஜூபிலி மண்டபத்தில் இடம் பெற்ற விழாவில் ஆயர் உரையாற்றும் போது இவ்வாறு கூறினார். விழாவிற்கு வண எஸ் பி. நேசகுமார் தலைமை தாங்கினார்.

அதி. வண. கென்னத் பெர்னாண்டோ தொடர்ந்து உரையாற்றுகையில்;

யாழ். குடா நாட்டுக்குச் செல்வதற்கு அரசு விமானம் வழங்க முன்வந்தது விமானமா, விசைப்படகா - எதில் பயணம் மேற்கொள்வது என்பதனைத் தீர்மானிக்க வேண்டியிருந்தது. நான் விசைப்படகில் பயணம்செய்ய முடிவு செய்தேன். கிளாலிக் கடல் வழியாக யாழ். குடா நாட்டுக்கு வருகை தந்ததால் மக்களின் உணர்வுகளை பகிர்ந்து கொள்ள முடிந்தது.

திருச்சபை மனித இனத்தின் ஐக்கியத்தை நாடி நிற்கிறது நாங்கள் ஒன்று பட

## எறிகணை வீச்சு

[யாழ்ப்பாணம்]

அராலித்துறையில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அராலிப் பகுதியை நோக்கி நேற்றிரவு பலத்த எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டதாக தெரியவருகிறது.

இதனால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.

## விவேகானந்தர் ஜயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் நூற்று முப்பதாவது ஆண்டு ஜயந்தி விழா எதிர்வரும் வியாழனன்று பிற்பகல்மூன்று முப்பது மணியளவில் திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்தில் "சுவாமி விவேகானந்தரின் வாழ்வியற் சிந்தனைகள்" என்னும் தலையங்கத்தில் திரு. சிவபாலனும் "சுவாமி விவேகானந்தரின்

விதித்திருந்த போதும் கூட இலங்கைக்கான அங்கிலிக்கன் திருச்சபையின் புதிய ஆயர் அதி வண. கென்னத் பெர்னாண்டோ நேற்று முன்தினமிரவு யாழ் வந்து சேர்ந்துள்ளார். இராணுவத்தின் கடுமையான எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது ஆயர் அதிவண. கென்னத் பெர்னாண்டோ துணிவுடன் யாழ். கடல் நீரேரி ஊடாக பயணம் செய்துள்ளமை பாராட்டப்பட வேண்டியது ஒன்று.

ஆயர் கென்னத்பெர்னாண்டோ யாழ். விஜயத்தில் சில முக்கிய நோக்கங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் அங்கிலிக்கன் திருச்சபையின் நடவடிக்கைகளை கவனிப்பதும், தமிழ் மக்களின் துயர்களை நேரடியாகக் கண்டறிவதும், விடுதலைப் புலிகள் பிரமுகர்களைச் சந்திப்பதும் முக்கியமானவை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் ஆயரின் நோக்கில் எது அதி முக்கியமானதாக இருந்தாலும் அவர் குடாநாட்டிற்குள் வருகை தந்ததின் மூலம் தமிழ் மக்களின் மீதான அடக்கு முறையினையையும் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள சுமைகளையும், அவர்களது நெருக்கடியான வாழ்க்கை முறையினையும் நேரடியாகக் காணக் கூடிய வாய்ப்பினைப் பெற்றுள்ளார்.

அதிலும் ஆயர் குடாநாடு வந்துள்ள வேளையானது சிறிலங்கா இராணுவம் தனது முற்றுகையைத் தீவிரமாக்கியுள்ளதோடு படுகொலைகளை தீவிரமாக்கியுள்ள காலமுமாகும் சிறிலங்கா விமானப் படையினரும் கடற்படையினரும் கிறிஸ்மஸ்தினத்தன்று அரியாலையிலும், பின்னர் கிளாலிக் கடற்பரப்பிலும் சித்தன்கேணியிலும் நடத்தியபடுகொலைகளின் சூடு தணியும் முன்னர் அவரது வருகை அமைந்துள்ளது. இது இராணுவத்தின் 'முற்றுகைக்குள்' உலகமறியாது தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் படுகொலைகளை ஆயர் விளங்கிக்கொள்ளப் போதுமானவையாகும்.

இதேவேளை, ஆயர் மேற்கொண்ட குடாநாட்டிற்கான கடற்பயணம், குடாநாட்டு மக்களின். ஆபத்து நிறைந்த பயணங்களை நேரடியாக அனுபவிப்பதற்கும் அத்தியாவசியப் பொருட்களின் உயர்ந்த விலைகளும் பற்றாக்குறையும், மக்களுக்கு அன்றாட வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை உணர்ந்து கொள்ளவும் வாய்ப்பாய் இருக்கும்

இதேவேளை படுகொலைகள் இராணுவ முற்றுகைபொருளாதாரத்தடை, போக்குவரத்துத்தடை என்பனவற்றால் தமிழ் மக்களை சிறிலங்கா அரசாங்கம் நசுக்க முற்பட்டுள்ளபோதும் தமது விடுதலைக்கான ஆயுதப்போராட்டத்தை தமிழ் மக்கள் தொடர்ந்தும் நடாத்திக் கொண்டிருப்பது ஆயருக்கு வேறு சில உண்மைகளை தெளிவுபடுத்தியிருக்கும்என்பதில் சந்தேகமில்லை. அதாவது, தமிழ் மக்கள் எந்த நெருக்கடியின் மத்தியிலும் தமது உரிமைகளை விட்டு கொடுக்கவோ, அன்றி, போராட்டத்தைக் கைவிடவோ தயாராகஇல்லை இப்பாரிய நெருக்கடியின் மத்தியிலும் தமிழ் மக்கள் தமது விடுதலைப்போரை முன்னெடுத்துச் செல்வதிலேயே அக்கறையாகவுள்ளனர் என்பதேஅவையாகும்

இந்நிலையில், ஆயர் கொழும்பு திரும்பியதும், தமிழ் மக்களுக்கு இளைக்கப் படும் இன்னல்களை வெளியுலகிற்குஎடுத்துக்கூறவேண்டும்இதேவேளை, இராணுவ முற்றுகைக்கோ அன்றி, படுகொலைகளோ இனப்பிரச்சினையைத் தீர்க்க மாட்டாது என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும். அதாவது இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமாகாது என்பதை சிங்கள அரசிற்கு உணர்த்த முற்பட வேண்டும்.

---

டே போகிறது. இன்று நடைபெறும் யுத்தநிலையை நோக்குமிடத்து யுத்தத்தை உடனடியாக நிறுத்தல் முக்கியமானதாகும். ஒரு தேசிய பிரச்சினைக்காகவே பத்து ஆண்டுகளாக யுத்தம் நடைபெறுகிறது.

நாட்டின் பொருளாதாரம் அரசியல், இனங்களுக்கிடையிலான தொடர்புகள், வெளிநாட்டு வியாபாரம், நாட்டின் சமாதானம் போன்றவற்றிற்கு இந்த யுத்தம் ஓர் அச்சுறுத்தலாகவே அமைந்துள்

டியின் மொழியாக்கம் இது.

இந்த ஆண்டு அதைவிட அதிகமாக செலவு செய்யப்படும் என அரசாங்கம் கூறுகின்றது. நமது பொருளாதாரம் இதனை தாங்கக் கூடிய நிலையில் இல்லை.

கடந்த பத்தாண்டு கால யுத்தத்தில் சுமார் 6000க்கும் மேற்பட்ட படையினர் பலியாகியுள்ளனர். 8000 பேர் அங்கவீனராகி உள்ளனர்.

ஏனெனில் யுத்த வடுக்கள் அந்தப் பிள்ளையின் மனதில் பதிந்துவிடும். நீண்ட யுத்தத்தின் பின் நாம் தீர்வை முன்வைத்தாலும் அவன் அதை விரும்பமாட்டான், எனவே இந்த அடிப்படையை மனதில் கொண்டு மிகவிரைவில் யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வர அரசு முயலவேண்டும். யுத்தம் தொடர்ந்தும் நீண்டு கொண்டு போனால் ஒருமைப்பாட்டை கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாதநிலை ஏற்படும்.

ங்கும்படியும் கூறுவதால் ஒரு பயனும் இல்லை. முதலில் தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தா விட்டால் 'ஈழம்' அமைவது உறுதி.

இழக்கு வடக்குடன் இணையவேண்டுமா? எனத் தேர்தல் வைத்தால் நிச்சயமாக கிழக்கு மாகாண மக்கள் இணைய வேண்டும் என்றே வாக்களிப்பார்கள் எனவே அரசு யுத்தத்தை உடனடியாக ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்.

---

# தமிழ்மக்களின் துயரங்களை என்னால் புரிய முடிகின்றது

## வரவேற்புக் கூட்டத்தில் ஆயர்கென்னத் பெர்னாண்டோ

நீங்கள் பயணம் செய்யும் வழியில்தான் நானும் பயணம் செய்தேன். அதனால் உங்கள் துன்ப துயரங்களையும், மன உணர்வுகளையும் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. உங்கள் துன்பகரமான அனுபவங்களைத் தெற்கில்தெரியப் படுத்தவிரும்புகிறேன். ஆனால் அனுபவங்களை வார்த்தைகளால் விளக்க முடியாது. தென் பகுதி மக்கள் சமாதானத்தை இப்போது விரும்புகிறார்கள். அண்மையில் ஜா எலவில் சர்வ மதத் தலைவர்கள் கூட்டத்தின் கருப்பொருளும் சமாதானந்தான் என்று அங்கிலிக்கன் திருச்சபையின் புதிய ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஆயரின் யாழ்ப்பாண விஜயத்தைக் கௌரவிக்கும் வகையில் பரி. யோவான் கல்லூரி பீற்றோ ஜூபிலி மண்டபத்தில் இடம் பெற்ற விழாவில் ஆயர் உரையாற்றும் போது இவ்வாறு கூறினார். விழாவிற்கு வண எஸ் பி. நேசகுமார் தலைமை தாங்கினார்.

அதி. வண. கென்னத் பெர்னாண்டோ தொடர்ந்து உரை

### சுயநிர்ணய

கையில்,

அரசியல் தலைமை பௌத்த தலைமையாக மாறுகிறது. நூறுசத விகித பலம் சிங்கள அரசுக்கு இருந்தாலும், எமது விருப்பத்துக்கு எதிராகஎம்மை ஆள முடியாது. நாங்கள் ஒரு சிறையில் வாழ்கிறோம் உலகில் எந்த பகுதியிலும் ஒரு பகுதி மக்களைச் சிறையில் வைத்திருக்கும் வழக்கம் கிடையாது.

சிங்களக் கிறிஸ்தவர் தமிழ் கிறிஸ்தவர் மீது தவறான அபிப்பிராயம் கொண்டுள்ளார்கள். ஒற்றுமைக்கும் ஐக்கியத்துக்குமான மையத்தின் தலைவராக இருந்தவர் நீங்கள். ஆயர் என்ற முறையில் சிங்களவர் மத்தியில் உள்ள இந்தத் தவறான அபிப்பிராயத்தைப் போக்க வேண்டும். கஷ்டத்தின் மத்தியிலும் கடல் மார்க்கமாக வந்தது உங்கள் துணிவை காட்டுகிறது. ஆயர், கத்தோலிக்கதிருச்சபை, குருக்கள், கத்தோலிக்க மக்கள் சார்பில் உங்களை வரவேற்கிறோம் என்றார்.

ஆயர்கள் என்ற முறையில் சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்ததாம்உதவ வேண்டும். பேபில் கோபுரத்தில் குழப்பமான நிலை ஏற்பட்டு ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமல் நடந்து கொண்டார்கள். அந் நிலைதான் இலங்கையில் உள்ளது. தென்பகுதி மக்கள் தமிழரின் பிரச்சினைகளை அறிந்து கொள்ள நீங்கள் உதவ வேண்டும் என்றார். தென் இந்திய திருச்சபை ஆயர் அதி. வண. டி. ஜே. அம்பலவாணர்.

சமாதானத்துக்கான பணியை நான் மிகவும் பணிவுடன் ஏற்றுக் கொள்கிறேன் இந்த நிலை அச்சத்தினால் ஏற்பட்டதல்ல என்றும் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பரியோவான் கல்லூரி நுழைவாயிலில் இருந்து ஆயர் நாதஸ்வர இசையுடன் வரவேற்கப்பட்டார். திருமறைக்கலா மன்ற மாணவிகள் வழங்கிய நாட்டிய அஞ்சலியும் இடம்பெற்றது.

விழா இறுதியில் அங்கிலிக்கன் ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ நல்லாசி வேண்டி இறைவனைப் பிரார்த்தித்து ஆசிர்வாதம் செய்தார்.

யாற்றுகையில்;

யாழ். குடாநாட்டுக்குச் செல்வதற்கு அரசு விமானம் வழங்க முன்வந்தது. விமானமா, விசைப்படகா - எதில் பயணம் மேற்கொள்வது என்பதனைத் தீர்மானிக்க வேண்டியிருந்தது. நான் விசைப்படகில் பயணம்செய்ய முடிவு செய்தேன். கிளாலிக் கடல் வழியாக யாழ். குடாநாட்டுக்கு வருகை தந்ததால் மக்களின் உணர்வுகளை பகிர்ந்து கொள்ள முடிந்தது.

திருச்சபை மனித இனத்தின் ஐக்கியத்தை நாடி நிற்கிறது நாங்கள் ஒன்று பட வேண்டும். ஒன்றுபட்ட இலங்கையில் தமிழர் தமது பண்பாட்டையும், சிங்களவர் தமது பண்பாட்டையும் பங்களிக்கலாம், நாடு இரண்டாகினால் இரு தரப்பினரும் பலவீனப் படுவார்கள் என்றும்,

மக்கள் சுதந்திரமாக நடமாட வேண்டும். பொருள்கள் சுதந்திரமாக வழங்கப்பட வேண்டும். தொடர்புச் சாதனங்களின் செயற்பாட்டில் சுதந்திரம் அவசியமானது. சமாதானம் மீளவும் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார்.

நல்லைஆதீனகுருமகாசன்னிதானம் சிறிலசிறிசோமசுந்தர பரமச்சாரிய சுவாமிகள் உரையாற்றுகையில் எது செய்வது. என்ன செய்வது என்று தெரியாத நிலையில் வாழ்கிறோம் இந்த நிலையில் சமயத் தலைவர்கள் ஒன்றுபட வேண்டும். இந்த மக்கள் சார்பில் ஆயரை வரவேற்று நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் மக்கள் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நிவாரணத்தைத் தரவேண்டும் என்றார் அவர்.

---

## எறிகணை வீச்சு

[யாழ்ப்பாணம்]

அராலித்துறையில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அராலிப் பகுதியை நோக்கி நேற்றிரவு பலத்த எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டதாக தெரியவருகிறது.

இதனால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.

## விவேகானந்தர் ஜயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் நூற்று முப்பதாவது ஆண்டு ஜயந்தி விழா எதிர்வரும் வியாழனன்று பிற்பகல்மூன்று முப்பது மணியளவில் திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்தில் "சுவாமி விவேகானந்தரின் வாழ்வியற் சிந்தனைகள்" என்னும் தலையங்கத்தில் திரு. சிவபாலனும் "சுவாமி விவேகானந்தரின் கீதா சிந்தனைகள்" என்னும் தலையங்கத்தில் திரு. மயில்வாகனமும் உரையாற்றவுள்ளனர்.

## விஞ்ஞான போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் நடாத்தும் கல்லூரிகளுக்கிடையிலான விஞ்ஞான வினாவிடைப் போட்டியும், பேச்சுப் போட்டியும் எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது என பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் அறிவித்துள்ளார்.

## சைக்கிள் திருட்டு

சாவகச்சேரிநவீனசந்தைக்கு முன்பாக சைக்கிளை நிறுத்தி விட்டு கடையொன்றினுள் பொருள்களை வாங்கி விட்டு திரும்புகையில் மேற்படி சைக்கிள் காணாமல்போயிருந்தது. இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

# வெகுஜன போருக்கு மக்கள் தயாராகி வருகின்றனர்

சிறிலங்காஅரசு திட்டமிட்டு மேற்கொண்டுவரும் அடக்கு முறைகளை கண்டித்தும், பொருளாதார தடை, போக்குவரத்துத் தடை, யுத்த நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேசுதல், உணவு, உறைவிடம், கல்வி, சுகாதார மருத்துவம் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கான பொருள்களை அனுப்புதல், முப்படைகளின் கண்மூடித்தனமான அட்டூழியங்களால் அப்பாவிப் பொது மக்கள் வெட்டியும், சுட்டும் கொலைப்பட்டு வதைக் கண்டித்தும் வரும் திங்களன்று தமிழீழ மக்களினால் நடாத்தப்படவிருக்கும் ஆர்ப்பாட்டப் பேரணியிலும் மறியல் போராட்டத்திலும் கலந்து கொள்ள அனைத்து தமிழீழ மக்களும், அரச தனியார் ஸ்தாபனங்களும், வங்கியாளர்கள், கூட்டுறவு ஸ்தாபன ஊழியர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள், சமய சமூக ஸ்தாபனங்கள்மகளிர் அமைப்புக்கள் அணி திரள்கின்றன.

இதற்காக கிராம மட்டத்திலும், கோட்ட மட்டத்திலும் கலந்துரையாடல்களும், கருத்தரங்குகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பேரணியின் முடிவில்அரசாங்க அதிபர் ஊடாக சிறிலங்கா ஜனாதிபதிக்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் கையளிக்கப்படுகின்ற மகஜர்களின் பிரதிகள் ஐக்கிய நாடுகள் சபைக்கும், வெளிநாட்டு தூதரகங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

மேலும் சிறிலங்கா அரசின் கண்மூடித்தனமான கோர இராணுவ தாக்குதல் புனித நத்தார் பண்டிகையின் போதும், கிளாலிப் படகுச் சேவையின் போதும் சித்தன் கேணியில் இடம்பெற்ற சுப்பசொனிக் குண்டு வீச்சினால் கோரப் படுகொலை செய்யப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவி பொது மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கப்படுவதுடன் சிறிலங்கா அரசாங்கத்தின் இச் செயற்பாடுகள் இரத்தச் சேற்றுக்குள் அடிப்படை மனித உரிமைகளை புதைத்துவிடும் அநாகரிக செயல் என கண்டித்து ஐக்கிய நாடுகள் சபைக்கு மகஜர் அனுப்பப்படவுள்ளது.

---

யாழ். இந்து சமூகத்தின்

## கண்ணீர் அஞ்சலி

### தேசிங்கராஜா யோகராஜா B. Com.

(ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

தோற்றம்: 25 - 12 - 1961 மறைவு: 08 - 01 - 1993

இந்துக் கல்லூரியின் வர்த்தகக் கல்வி
ஆசானாய் அமர்ந்து
ஆண்டு சில ஆனாலும்
பணியால் - பண்பால்
அனைவர் உள்ளத்தையும்
கவர்ந்த யோகராஜாவின்
இழப்பு எமக்குப் பெரிதே
அவர் ஆத்மா சாந்தி பெற
இறைஞ்சும் நேரத்தில்
அவரது மனைவிக்கும்
ஏனையோர்க்கும் எமது
ஆழ்ந்த அனுதாபத்தையும்
தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
பழைய மாணவர்கள்.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

யாழ்ப்பாணம்.
09 - 01 - 1993

குறிப்பு: யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்கள் அனைவரும் இன்று (09 - 01 - 93) காலை8. 30 மணிக்கு கல்லூரிக்குச் சமூகம் தரவும். மாணவ அமைப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் அவர்கள் சார்ந்த அமைப்புகளின் கோல உடையில் சமூகம் தரல் வேண்டும்.

அதிபர்

(சி/5745)

---

## விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட சபையில் கழகங்களைப் பதிவு செய்துகொள்வதற்கான திகதி 14. 01. 93 வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இடங்களிலும், அவ்வவ்வட்டப் பிரதேச விளையாட்டுப் பொறுப்பாளர்களிடமும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

சிங்கள

பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. மக்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

'யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பல அகதிமுகாம்களுக்குச் சென்று பார்வையிட்டேன். அங்குள்ள மக்கள் குறிப்பாக சிறுவர்கள் போதிய உணவின்மையால் போஷாக்கு அற்றவர்களாக உள்ளனர். வழங்கப்படும்உணவுகள் போதிய அளவினதாக இல்லை'' என்றார்.

மக்களுக்குரிய உரிமைகளை

---

### கலை நிகழ்ச்சி

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டு கழகத்தின் தென்மராட்சிக் கோட்டத்தினர் நடாத்தும் கலை நிகழ்ச்சிகள் இன்று மாலை 7. 30 மணிக்கு கைதடி நவில்ட் பாடசாலை அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ''களத்தில் சாத்தான்'' ''புதிதாய் எழுவோம்'' ஆகிய இரு நாடகங்கள் மேடை ஏறவுள்ளன.

## வர்த்தகர் சங்க தேர்தல்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய வர்த்தகர் சங்கத்தின் தேர்தல் விரைவில் நடைபெற உள்ளதாக வர்த்தகர் சங்க வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

(88)

---

கிளாலி

பீரங்கித் தாக்குதல்கள் குறித்தும் இத்தாக்குதல்களினால் அதிகளவு படகுப் பயணிகள் படுகொலை செய்யப்பட்டு வருவது குறித்தும் விபரமான தகவல்கள் அடங்கிய அறிக்கை ஒன்று அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய தலைமைச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதியினால் மேற்படி விபரங்கள் அடங்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டது. தற்பொழுது கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். வதிவிடப் பிரதிநிதி மேற்படி அறிக்கையை கொழும்பில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள்

---

யாழ். பல்கலைக்கழக

## ஆய்வுகூட செயற்பாடுகள் ஸ்தம்பிதமடையும் நிலை

யாழ். பல்கலைக்கழக முழுமையான செயற்பாட்டுக்குத் தேவையான எரிபொருள்கள் முற்றாகத்தீர்ந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் விஞ்ஞான மருத்துவ பீடத்திற்கான செயற்பாடுகள் அடுத்த வாரமளவில் முற்றாகச் செயலிழக்கும் எனப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ் பல்கலைக்கழகத்திற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மாதாந்தம் தேவையான பொருள்கள் உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்படுமென சிபார்சு செய்தும் எவ்வித பொருள்களும் அனுப்பிவைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மருத்துவபீட மாணவர்களுக்கும், விஞ்ஞானபீட மாணவர்களுக்குமான பரிசோதனைச் செய்முறைகளுக்குரிய இரசாயனங்கள் முற்றாகத் தீர்ந்துவிட்டன. இதனால் செய்முறைகள் யாவும் விரிவுரையாளரினாலேயே செய்துகாட்டப்படுவதாக மாணவர்கள் பார்வையாளர்களாகவே கற்கை நெறிகளை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக்கிற்கு எதிராக தாக்குதல் மேற்கு நாடுகள் திட்டம்

(பாக்தாத்)

தென் ஈராக்கில் ஈராக்கினால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை அப்புறப்படுத்துமாறும் மீறினால் ஈராக்கிற்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மேற்கத்திய கூட்டு நாடுகள் ஈராக்கிற்கு எச்சரிக்கை செய்துள்ளன.

இதற்கென இந்நாடுகள் விதித்த காலக்கெடுவை நிராகரித்த ஈராக்கிய அரசாங்கம் தங்களின் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை மேற்கத்திய நாடுகளின் கூட்டு இராணுவம் தாக்கினால் தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்று நடைபெற்ற ஈராக்கிய அமைச்சரவைக் கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது யுத்தத்திற்கான தயாரிப்பில் ஈராக் ஈடுபட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே தென் ஈராக்கிய வான்பரப்பில் ஈராக்கிய விமானங்கள் பறப்பதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புசபை தடைவிதித்துள்ளதும் மீறிப் பறந்த ஈராக்கிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதும் தெரிந்ததே.

இவ்வான்பரப்பில் மேற்கத்திய கூட்டு நாடுகளின் விமானங்கள் பறப்பதற்கு ஈராக்கின் மேற் குறிப்பிட்ட ஏவுகணைகள் அச்சுறுத்தலாக இருப்பதாக கூறியே இவ் ஏவுகணைகளை அப்புறப்படுத்துமாறு மேற்கத்திய கூட்டு நாடுகள் காலக்கெடு விதித்துள்ளன.

---

புலிகள்

ரக் கட்சி என்பன இப் பிரச்சினையில் நேரடியாகச் செயல்பட பயப்படுகிறார்கள். சிங்கள வாக்காளர்களைத் திருப்திபடுத்தவே இந்த பிரச்சினை இழுபறிப்படுகின்றது. என்று அவர் தெரிவித்தார்.

அரசாங்கமோ, ஜனாதிபதியோ அல்லது வேறு எந்த கட்சியோ ஒரு தீர்வை முன்வைத்தால் அது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்றும், விடுதலைப் புலிகள் எப்போதும் பேச்சுவார்த்தைக்குத் தயாராக உள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

## மரண அறிவித்தல்கள்

### காசியர் சின்னத்தம்பி

(சிரத்தி)

நவக்கிரியைச் சேர்ந்த காசியர் சின்னத்தம்பி 2-01-93 அன்று கிளாலி கடலில் இடம்பெற்ற தாக்குதலில் அகால மரணமானார். இவர் அன்னம்மாவின் அன்புக் கணவரும், கணேசமூர்த்தி (சுவிஸ்), கலாமலர், கலாதேவி (1992-ம் ஆண்டு உயர்தர மாணவி யாழ். இந்துமகளிர் கல்லூரி),

---

## தமிழீழ மக்களின் ஒன்றிணைந்த மாபெரும் வெகுஜனப் போராட்டமும் ஊர்வலமும்

காலம்: 11-1 0-1993 திங்கட்கிழமை காலை 10 மணி

இடம்: நல்லூர் கந்தசாமி கோவில் முன்றல்

(ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

தோற்றம்: 25 - 12 - 1961 | மறைவு: 08 - 01 - 1993

இந்துக் கல்லூரியின் வர்த்தகக் கல்வி
ஆசானாய் அமர்ந்து
ஆண்டு சில ஆனாலும்
பணியால் - பண்பால்
அனைவர் உள்ளத்தையும்
கவர்ந்த யோகராஜா'வின்
இழப்பு எமக்குப் பெரிதே
அவர் ஆத்மா சாந்தி பெற
இறைஞ்சும் நேரத்தில்
அவரது மனைவிக்கும்
ஏனையோர்க்கும் எமது
ஆழ்ந்த அனுதாபத்தையும்
தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர், பழைய மாணவர்கள்.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

யாழ்ப்பாணம்.
09 - 01 - 1993

குறிப்பு: யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்கள் அனைவரும் இன்று (09 - 01 - 93) காலை 8. 30 மணிக்கு கல்லூரிக்குச் சமுகம் தரவும். மாணவ அமைப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் அவர்கள் சார்ந்த அமைப்புகளின் கோல உடையில் சமுகம் தரல் வேண்டும்.

அதிபர்

(சி/5745)

## தமிழீழ மக்களின் ஒன்றிணைந்த மாபெரும் வெகுஜனப் போராட்டமும் ஊர்வலமும்

**காலம்: 11-1 0-1993 திங்கட்கிழமை காலை 10 மணி**
**இடம்: நல்லூர் கந்தசாமி கோவில் முன்றல்**

பின்வரும் 4 கோரிக்கையை வலியுறுத்தி யாழ். மாவட்ட வெகுஜன இயக்கத்தினால் முன்னெடுக்கப்படும் வெகுஜனப் போராட்டத்திலும் ஊர்வலத்திலும் அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினதும், தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களினதும், சிக்கன சேமிப்புக் கூட்டுறவுச் சங்கங்களினதும் இதர சங்கங்களினதும் அங்கத்தவர்களும், பணியாளர்களும், பாவனையாளர்களும் "இது எமது போராட்டம்" என்ற உணர்வுடன் முழுப் பங்கினை அளித்து போராட்டம் வெற்றி பெற உதவுவதற்கு நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலுக்கு அலைஅலையெனத் திரண்டு வருமாறு வேண்டுகிறோம்.

### நான்கு அம்ச கோரிக்கை

★ 32 மாதகாலம் நடைபெறும் அர்த்தமற்ற போரை முடிவுக்குக் கொண்டு வருதல்.
★ பூநகரி இராணுவத்தை வாபஸ்பெற்று பூநகரிப் பாதையை மக்கள் பாவனைக்குத் திறத்தல்.
★ யாழ். மாவட்டத்துக்கு விதிக்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருள்கள் தடையை நீக்கி, பொருள்கள் தடையின்றிக் கிடைக்கச் செய்தல்.
★ விடுதலைப் புலிகளுடன் உடனடி பேச்சுவார்த்தை ஆரம்பிக்கவும்.

யாழ். மாவட்டத்தில் நத்தார் தினத்திலும், தொடர்ந்த நாட்களிலும் விமானப் படையாலும் கடற்படையாலும் ஈவிரக்கமற்ற முறையில் நடாத்தப்பட்ட படுகொலைகளை வெளிக்கொணரவும்.

யாழ்ப்பாண மாவட்ட
கூட்டுறவுச் சபை

[சி/5144]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

அப்பாவி பொது மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கப்படுவதுடன் சிறிலங்கா அரசாங்கத்தின் இச் செயற்பாடுகள் இரத்தச் சேற்றுக்குள் அடிப்படை மனித உரிமைகளை புதைத்துவிடும் அநாகரிக செயல் என கண்டித்து ஐக்கிய நாடுகள் சபைக்கு மகஜர் அனுப்பப்படவுள்ளது.

## விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட சபையில் கழகங்களைப் பதிவு செய்துகொள்வதற்கான திகதி 14. 01. 93 வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இடங்களிலும், அவ்வவ்வட்டப் பிரதேச விளையாட்டுப் பொறுப்பாளர்களிடமும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது

### சிங்கள

பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. மக்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

'யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பல அகதிமுகாம்களுக்குச் சென்று பார்வையிட்டேன். அங்குள்ள மக்கள் குறிப்பாக சிறுவர்கள் போதிய உணவின்மையால் போஷாக்கு அற்றவர்களாக உள்ளனர். வழங்கப்படும் உணவுகள் போதிய அளவினதாக இல்லை" என்றார்.

மக்களுக்குரிய உரிமைகளை வழங்குமாறு கோரி கடந்த 2 ஆம் திகதி ஜாஎலவில் நாம் நடத்திய கூட்டம் வெற்றியாக அமைந்தது. "தென்னிலங்கை மக்கள் கிளர்ந்தெழுந்து தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்குமாறு கூறும் காலம் வெகு விரைவில் ஏற்படும். மக்களுக்குப்பிரச்சினைகளையும், நிலைமையையும் தெளிவுபடுத்திப் பிரச்சினைகளைத்தீர்க்கவேண்டும்" என மேலும் எமது செய்தியாளரிடம் அவர் தெரிவித்தார்.

### விட்டமின்

யாகி போயிருந்த மல்டி விட்டமின் வில்லைகளை தற்போது ஆஸ்பத்திரி வட்டாரங்கள் பயன்படுத்துவதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன் நீரழிவுப் பரிசோதனை செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பெனடிக்ஸ்ரைசல் முற்றாக முடிவடைந்து போயிருப்பதாகவும் சிகிச்சைத் தலங்களில் தங்கிசிகிச்சைபெறுவோர் மருந்துக் கடைகளில் இதனைப்பெற்று வரும்படி கேட்கப்படுவதாகவும் வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவுகளில் சிகிச்சை பெறுவோர் வெளியிடங்களில் நீரிழிவு பரிசோதனை மேற்கொள்ளும்படி கேட்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

(பாக்தாத்)

தென் ஈராக்கில் ஈராக்கினால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை அப்புறப்படுத்துமாறும் மீறினால் ஈராக்கிற்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மேற்கத்திய கூட்டு நாடுகள் ஈராக்கிற்கு எச்சரிக்கை செய்துள்ளன.

இதற்கென இந்நாடுகள் விதித்த காலக்கெடுவை நிராகரித்த ஈராக்கிய அரசாங்கம் தங்களின் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை மேற்கத்திய நாடுகளின் கூட்டு இராணுவம் தாக்கினால் தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்று நடைபெற்ற ஈராக்கிய அமைச்சரவைக் கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது யுத்தத்திற்கான தயாரிப்பில் ஈராக் ஈடுபட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே தென் ஈராக்கிய வான்பரப்பில் ஈராக்கிய விமானங்கள் பறப்பதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புசபை தடைவிதித்துள்ளதும் மீறிப் பறந்த ஈராக்கிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதும் தெரிந்ததே.

இவ்வான்பரப்பில் மேற்கத்திய கூட்டு நாடுகளின் விமானங்கள் பறப்பதற்கு ஈராக்கின் மேற் குறிப்பிட்ட ஏவுகணைகள் அச்சுறுத்தலாக இருப்பதாக கூறியே இவ் ஏவுகணைகளை அப்புறப்படுத்துமாறு மேற்கத்திய கூட்டு நாடுகள் காலக்கெடு விதித்துள்ளன.

### இளாலி

பீரங்கித் தாக்குதல்கள் குறித்தும் இத்தாக்குதல்களினால் அதிகளவு படகுப் பயணிகள் படுகொலை செய்யப்பட்டு வருவது குறித்தும் விபரமான தகவல்கள் அடங்கிய அறிக்கை ஒன்று அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய தலைமைச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதியினால் மேற்படி விபரங்கள் அடங்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டது. தற்பொழுது கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். வதிவிடப் பிரதிநிதி மேற்படி அறிக்கையை கொழும்பில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார். மேற்படி அறிக்கை இவ் அலுவலகத்தினூடாக ஜெனிவாவில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய தலைமை அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து நேற்று மாலை எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்காவின் ஆயுதப்படைகளினால் யாழ் குடாநாட்டு மக்கள் சூழப்பட்டிருப்பதாகவும் தற்போது இவர்கள் குடா நாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய போக்குவரத்துப் பாதை இளாலிக் கடற்பரப்பு மட்டுமே என்றும் இவ் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதாகவும். தெரியவருகிறது [க]

## வாகன இலக்கங்கள்

நேற்று வவுனியா தாண்டிக்குளம் சோதனைச் சாவடிகளினூடாக வாகனங்கள் அனுமதிக்கப்பட்டன. ஆயினும் தவிர்க்க முடியாத காரணங்களினால் வாகன இலக்கங்களைப் பிரசுரிக்க முடியவில்லை. அவ்விலக்கங்கள் நாளை பிரசுரிக்கப்படும்.

### புலிகள்

ரக்கட்சி என்பன இப் பிரச்சினையில் நேரடியாகச் செயல்பட பயப்படுகிறார்கள். சிங்கள வாக்காளர்களைத் திருப்திபடுத்தவே இந்த பிரச்சினை இழுபறிப்படுகின்றது. என்று அவர் தெரிவித்தார்.

அரசாங்கமோ, ஜனாதிபதியோ அல்லது வேறு எந்த கட்சியோ ஒரு தீர்வை முன் வைத்தால் அது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்றும், விடுதலைப் புலிகள் எப்போதும் பேச்சுவார்த்தைக்குத் தயாராக உள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்கள்

### காசியர் சின்னத்தம்பி (சிரத்தி)

நவக்கிரியைச் சேர்ந்த காசியர் சின்னத்தம்பி 2-01-93 அன்று இளாலி கடலில் இடம்பெற்ற தாக்குதலில் அகால மரணமானார். இவர் அன்னம்மாவின் அன்புக் கணவரும், கணேசமூர்த்தி (கவிஸ்), கலாமலர், கலாதேவி (1992-ம் ஆண்டு உயர்தர மாணவி யாழ். இந்துமகளிர் கல்லூரி), ஆவரங்கால் நடராச ராமலிங்க வித்தியாசாலை மாணவர்களான கணேசலிங்கம், கலாரஞ்சினி, கணேசராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், கதிர்காமநாதனின் (கிளி) அன்பு மாமனாருமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
கணேசலிங்கம் [மகன்]

நவக்கிரி,
அச்சுவேலி மேற்கு, (3965)

### திரு. தே. யோகராஜா (B.Com )
(கணக்கியல் ஆசிரியர் யாழ். இந்துக்கல்லூரி)

சுதுமலை தெற்கைச்சேர்ந்த தேசிங்கராஜா யோகராஜா 08-01-93-ல் காலமானார். இவர் காலஞ்சென்ற தேசிங்கராஜா, திருமதி ம. தேசிங்கராஜா ஆகியோரின் அன்புப் புதல்வனும், திருமதி யோ. கௌரியின் அன்புக்கணவரும் நேசராசா(தேவன்), சோதிராசா, கிரிசா ஆகியோரின் சகோதரனும் ஆறுமுகம், பொன்மணி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் (09-01-93) இன்று சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று ஆனைக்கோட்டை கருசம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கு. குணசிங்கம் (ஆசிரியர்)

சுதுமலை தெற்கு,
சாவற்கட்டு. (3962)